ஓம்

பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

மலர் 4. சென்னை, 1936ஞு ஜூலை மீ 15உ இதழ் 8.

உள்ளுறை.

	விஷயம்.	பக்கம்.
1.	காங்கிரஸ் தேர்தல் முழக்கம்	2
2.	காலச் சக்கரம்	5
3.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	9
4.	மூட்டைப்பூச்சிகளுக்கு வந்தனம்	14
5.	கள்ளர் பள்ளர் யுத்தம்	17
6.	"குஸுமாவின் குயுக்தி"	23
7.	வஸந்த-குமார்	26
8.	எங்கள் வீட்டுப் போக்கிரி	29
9.	அட சகுனமே!	33
10.	ஹரிஜன் ஸ்கூல் இன்ஸ்பெக்ஷன்	36
11.	மஹிஷங்களின் மகாநாடு	38
12.	கர்வம்கொண்ட பொரியரிசி!	43
13.	கொள்ளிவாய்ப் பிசாசு	46
14.	கான்ஸ்டேபிளின் ஏமாற்றம் (படம்)	48
15.	ஆடல் பாடல்	49

"விகடனி"ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே. தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

காங்கிரஸ் தேர்தல் முழக்கம்

அடுத்த ஆண்டில் புதிய சீர்திருத்த அரசியல் அமலுக்கு வருகிறது. ஒவ்வொரு மாகாணச் சட்டசபைத் தேர்தலிலும் காங்கிரஸ் தன்னுடைய பிரதிநிதிகளை நிறுத்துவதாகத் தீர்மானித்திருக்கிறது. இரண்டு சட்டசபைகள் இருக்கும் இடங்களில் அந்த இரண்டு சபைகட்கும் தன்னுடைய பிரதிநிதிகளை நிறுத்தவேண்டும் என்றும் காங்கிரஸ் முடிவு செய்திருக்கிறது. தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் பெருவாரியாக வெற்றி பெறவேண்டும். காங்கிரஸ் மந்திரி பதவிகளை ஏற்கவேண்டும் என்று தீர்மானித்தாலும் அல்லது பதவி ஏற்காமலே பொதுஜன நன்மைக்கான காரியங்களைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தாலும் அவைகளை நிறைவேற்றக் காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளில் பெரும்பான்மையோராக இருக்கவேண்டும். எனவே இப்பொழுதிருந்தே தேர்தல் பிரசாரம் தீவிரமாய் நடத்தவேண்டும். இதற்காகக் காங்கிரஸ் சட்டசபைக்கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரியாலயம் பம்பாயில் ஏற்படுத்தப்பட்டிருப்பது எல்லாருக்கும் தெரியும். இந்தக்கமிட்டியின் தலைவர் சர்தார் வல்லபாய் படேல். காரியதரிசி பாபுராஜேந்திரப் பிரஸாத். இவ்விரு தலைவர்களும் சென்ற 7-ம் தேதியில் பம்பாயில் முதன் முதலாகக் காங்கிரஸ் சட்டசபைத் தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கி விட்டார்கள். சட்டசபைத் தேர்தல் வரை என்ன என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிச் சர்தார் வல்லபாய் படேல் தமது சொற்பொழிவில் விரிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். படேல்—ராஜேந்திரபாபு கோஷ்டிக்குச் சட்டசபைப் பிரவேசத்தில் நம்பிக்கை இல்லை. இவர்கள் தீவிர மாறுதல் வேண்டாதவர்கள் என்பது உலகப் பிரசித்தம். ஆனால் காங்கிரஸ் இப்பொழுது சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்திருப்பதால் அந்தக் கட்டளையைச் சிரமேற்றாங்கித் தேர்தல் பிரசாரம் செய்ய முற்பட்டிருக்கின்றனர். நாட்டிலுள்ள காங்கிரஸ்காரர் எல்லாரும் இவர்களைப் போலவே தொண்டாற்ற முன் வந்தால் வரப்போகும் தேர்தல்களில் காங்கிரஸுக்கு அபாரமான வெற்றி சித்திக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. தனிப்பட்ட அபிப்பிராயம் எப்படியிருந்தபோதிலும் காங்கிரஸில் சேர்ந்திருக்கும் வரை காங்கிரஸ் கட்டளைகளை மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுவதே நீதியாகும். அங்ஙனம் செய்யாவிட்டால் காங்கிரஸுக்கும் நாட்டுக்கும் துரோகம் செய்தவர்களே ஆவார்கள்.

இந்தியாவில் புதிய சட்டசபை வாக்காளர்களின் தொகை 3 கோடி. இந்த 3 கோடி மக்களுக்கும் தேர்தல்களில் வாக்கு அளிக்க உரிமை உண்டு. எல்லா மாகாணங்களிலும் எல்லா ஸ்தானங்களிலும் 2100 அபேக்ஷகர்களைக் காங்கிரஸ் தேர்ந்தெடுக்கவேண்டும். மூன்றுகோடி வாக்காளர்களும் காங்கிரஸ் அபேக்ஷகர்களான 2100 பேருக்கும் வாக்களிக்க நாடெங்கும் தீவிரமான பிரசாரம் நடத்தவேண்டும். இதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் காங்கிரஸ் சட்டசபைக்கமிட்டியார் செய்யவேண்டும். இந்தக் கமிட்டியாருக்குத் துணைபுரிய ஒவ்வொரு மாகாணத்திலும் காங்கிரஸ் மாகாணச் சட்டசபைக்கமிட்டிகள் ஏற்படுத்தப்படும். தேர்தல் பிரசாரம் நடத்தக் கடமைப்பட்டது சட்டசபைக்கமிட்டியே. ஆனால் நாடெங்கும் உள்ள காங்கிரஸ்காரர்களும் தொண்டர்களும்-ஆண் பெண் அடங்கலும் எல்லாக் காரியங்களையும் சிறிது காலத்திற்கு நிறுத்தி வைத்துவிட்டுத் தேர்தல் பிரசாரத்தில் முனைந்து நிற்கவேண்டும் என்று சர்

தார் வல்லபாய் படேல் கூறுகிறார். நமது நாட்டு வாக்காளர்களில் பலருக்கு வாக்குரிமையின் மேன்மை தெரியாது. எனவே அவர்கள் வாக்களிக்கும் விஷயத்தில் அவ்வளவாகச் சிரத்தைகாட்ட மாட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் உற்சாகம் இன்றிச் சும்மா இருந்துவிட்டால் கடைசி வெற்றியில் மிகுந்த ஏமாற்றம் உண்டாகவும் இடமேற்பட்டுவிடும். இந்தியாவின் மூலை முடக்குகளில் எல்லாம் காங்கிரஸ் சபைகள் இருப்பதால் ஆங்காங்குள்ள காங்கிரஸ் தொண்டர்களும் அபிமானிகளும் வாக்காளருக்கு உணர்ச்சியை உண்டாக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் வாக்குரிமை அளிக்கும் விஷயத்தில் வாக்காளருக்கு எல்லாவிதமான உதவிகளையும் காங்கிரஸ்காரர்கள் செய்யவேண்டும் என்று சர்தார் வல்லபாய் படேல் விரும்புகின்றார். சர்தார் படேல் காங்கிரஸ்காரரிடம் பூரண நம்பிக்கை வைத்திருக்கின்றார். அந்த நம்பிக்கைக்கு எல்லாரும் பாத்திரராக விளங்கவேண்டும் என்றே "விகடன்" விரும்புகின்றான். எல்லா மாகாணங்களிலும் சட்டசபைக் கமிட்டிகளை ஏற்படுத்திய உடனே தேர்தல் பிரசாரம் மும்மரமாக ஆரம்பமாகி விடும். காங்கிரஸுக்கு உள்ள சக்தியை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.

கூடிய விரைவில் அரசாங்கத்தார் வாக்காளர் முதல் ஜாபிதாவை வெளியிடுவார்கள். இது அநேகமாய் ஆகஸ்டு மாதத்தில் வெளிவரும். அதில் எந்த எந்த வாக்காளர் பெயர் சேர்ந்திருக்கிறது அல்லது இல்லை என்பது நன்றாய்த் தெரியும். யாருடைய பெயர் சேர்க்கப்படவில்லையோ அவர் மீண்டும் தெரிவித்துக் கொண்டால் அடுத்த ஜாபிதாவில் அந்தப் பெயர் சேர்க்க ஏற்பாடு செய்யப்படும். இதற்குக் காங்கிரஸ்காரர்கள் மிகவும் சிரத்தை காட்டி வேலை செய்யவேண்டியிருக்கும். வாக்காளர் ஜாபிதா இரண்டாந்தடவை வெளியானவுடனேதான் சரியான தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகவேண்டும். இதற்கிடையில் காங்கிரஸ் சட்டசபைக் கமிட்டியார் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்து வெளியிடுவார்கள். இந்த விஞ்ஞாபனம் பிரசாரகர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மாகாணச் சட்டசபைக் கமிட்டிகள் மிகுந்த பொறுப்பை வகிக்கவேண்டியிருக்கும். எனவே அவை அறிவாற்றல்களில் சிறந்தவர்களைத் தேர்ந்து அங்கத்தினர்களாகச் சேர்க்க வழிதேடவேண்டும். அபேக்ஷகர்களை மாகாணச் சட்டசபைக் கமிட்டிகளே தேர்ந்தெடுத்து அகில இந்தியச் சட்டசபைக் கமிட்டிக்குச் சிபார்சு செய்யவேண்டும். எல்லாக் கஷ்டங்களும் இதில்தான் இருக்கின்றன. அபேக்ஷகர்களாக நிற்கக் கூடியவர்கள் செல்வாக்குப் படைத்தவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் உண்மையான காங்கிரஸ் பற்றுடையவர்களாயிருக்கவேண்டும். தேர்தலில் வெற்றிபெறும் நோக்கத்துடன் காங்கிரஸில் சேருபவர்களை நம்பக்கூடாது. அத்தகையவர்களை நம்பினால் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின கதையாகவே முடியும். இவர்கள் வெற்றிபெற்ற பிறகு காங்கிரஸுக்குத் துரோகம் செய்யக் கொஞ்சமும் பின்வாங்க மாட்டார்கள். இவ்வுண்மையை நாம் ஜில்லாபோர்டு தேர்தல்களில் அநுபவத்தில் உணர்ந்து கொண்டோம். எனவே இவ்விஷயத்தில் காங்கிரஸ்தலைவர்கள் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றே "விகடன்" எச்சரிக்கை செய்ய விரும்புகின்றான்.

பொதுத் தொகுதிகளுக்கு மாத்திரமின்றிக் கூடுமானால் ஒதுக்கப்பட்ட தொகுதிகளுக்கும் காங்கிரஸ் அபேக்ஷகர்களே நிறுத்தப்படுவார்கள் என்று சர்தார் வல்லபாய் படேல் தெரிவித்தார். இதில் சிறிது கஷ்டமிருந்தாலும் காங்கிரஸை ஆதரிக்கக் கூடியவர்களுக்குக் காங்கிரஸ்காரர்கள் ஆதரவு நல்கல் விரும்பத்தக்கதாகும். யார் யார் தேர்தல்களில் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள் என்று தெரிகிறதோ அவர்களையே நிறுத்த வேண்டும். எல்லா ஸ்தானங்களிலும் காங்கிரஸ் போட்டி போட்டது என்ற பேருக்காக அநாமதேயப்பேர்

வழிகளை யெல்லாம் நிறுத்திவைக்க முயலக் கூடாது என்று சர்தார் படேல் கூறியது பெரிதும் கவனிக்கத்தக்க செய்தியாகும். அநாமதேயங்களை நிறுத்தினால் தோல்வியோடு காங்கிரஸ் பெருமைக்கும் களங்கம் நேரிடும். தகுந்த ஆசாமி கிடைக்காவிட்டால் போட்டி யில்லாமல் சும்மா இருந்து விடுவதே மேலாகும். எனவே மாகாணச் சட்டசபைக் கமிட்டியார் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும் என்று வல்லபாய் படேல் எச்சரிக்கை செய்தது போற்றத் தக்கதே. இந்த மகத்தான காரியத்திற்கு நாட்டு மக்கள் எல்லாரும் போதாவு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை விரிக்கவும் வேண்டுமோ? முக்கியமாக வாக்காளர்களா யிருப்பவர்கள் காங்கிரஸின் உயரிய லக்ஷியத்தை நிறைவேற்றி வைக்கப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதைத் தனியாகச் சொல்ல வேண்டியது இல்லை.

சட்ட சபைப் பிரவேசம் அவசியமா இல்லையா? உத்தியோகம் ஏற்க வேண்டுமா வேண்டாமா? என்பன போன்ற விஷயங்களைப் பற்றி இப்பொழுது விவாதித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. “காங்கிரஸ் சட்ட சபைகளைக் கைப்பற்றும் விஷயத்தில் கருத்து வேற்றுமையே இல்லை. இவ் விஷயத்தில் ஏகமனதான அபிப்பிராயம் வெளியிடப் பட்டிருக்கிறது” என்று மாறுதல் வேண்டாதாராகிய வல்லபாய் கூறியிருப்பதை எல்லாரும் கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

அவர் கூறியது போல் சட்ட சபைகளில் அன்றி வெளியிலும்—இந்தியா முழுவதிலுமுள்ள வயல்களிலும், தொழிற்சாலைகளிலுங் கூடச் சுதந்தரப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அதற்காகக் காங்கிரஸ் சட்டசபை வேலைத் திட்டத்தைக் கைவிடுவது கஷ்டமே. “சட்ட சபைகளில் அதிக நன்மை இல்லா விட்டாலும் விஷமிகள் அவைகளைக் கைப்பற்றி நாட்டு முன்னேற்றத்தைத் தடை செய்வதையாவது ஓரளவு தடுக்கலாம். எனவே எல்லாரும் தற்சமயம் மற்ற வேலைகளை நிறுத்தி விட்டுத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும்” என்று சர்தார் கூறுவது காலத்திற் கேற்ற அறிவுரையாகும். உத்தியோகம் ஏற்கும் விஷயத்தை இப்பொழுது கொண்டு வந்து குழப்பக் கூடாது என்று அவர் கூறுகிறார். சட்ட சபைகளில் பலம் திரட்ட வேண்டியது ஒன்றே இப்போதைய முக்கிய நோக்கம். பிறகு உசிதா உசிதம் அறிந்து உத்தியோக விஷயத்தைக் காங்கிரஸ் முடிவு செய்யும். தேர்தலில் வெற்றி பெறும் வரை நாம் ஒரே கட்டுப்பாடாக இருந்து வேலை செய்ய வேண்டும். எனவே இந் நெருக்கடியான சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் கருத்து வேற்றுமைகளை வளர்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பது “விகட”னது பணிவான வேண்டுகோள்.



காலச்சக்கரம்

காங்கிரஸ் விரோதிகளின் விஷமப் பிரசாரம்

திலகர் சுயாராஜ்ய நிதியைப் பற்றியும் காங்கிரஸ் வரவு செலவைப் பற்றியும் சில காலமாகச் சிலர் புகார் கூறி வருகின்றனர். அவ்வாறு வீண் புகார் கூறி வருபவர்கள் யார்? வடநாட்டில் இரண்டோரிடங்களிலும், தென்னாட்டிலும் காங்கிரஸ் விரோதிகளாகவுள்ள ஒரு சிலரேயாவர். திலகர் சுயாராஜ்ய நிதி சுமார் 15 வருஷங்களுக்கு முன் மகாத்மா காந்தியால் திரட்டப்பட்டு, தக்க வழியில் செலவு செய்யப்பட்டு வந்திருக்கிறது. அப்போதெல்லாம் அந்நிதி வரவு செலவைப் பற்றி யாருங் குறை கூறவில்லை. இப் புகாரெல்லாம் காங்கிரஸ், சட்டசபைப் பிரவேசத்தை மேற்கொண்ட பிறகே ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமென்ன? இப்போது இந்நிதியைப் பற்றிக் குறை கூறமுன் வந்திருப்போர் இதுவரை எங்கு சென்றிருந்தனர். 15 வருஷங்களுக்கு முன் நடந்த விஷயங்களை இப்போது துருவிப் பார்க்க ஆரம்பித்திருப்பதன் நோக்கமென்ன? பழைய கணக்குகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற யோசனை திடீரென ஏற்பட்டதேன்? அப்படி குறை கூற முற்பட்டிருக்கும் இவர்களில் ஒருவரேனும், திலகர் சுயாராஜ்ய நிதிக்கு ஒரு பைசாவும் கொடுத்தவர்களாகக் காணப்படவில்லை. மேற்படி நிதிக்குப் பொருளுதவி செய்தவர்களுக் கன்றோ, தாங்கள் கொடுத்த பொருள் தக்க வழியில் செலவழிக்கப்பட்டு வருகிறதா என்ற கவலை யேற்பட வேண்டும்? ஒன்றுங் கொடாதவர்களுக்கு இவ்வித கவலை ஏன்?

காங்கிரஸ் விரோதிகளுக்கு திலகர் சுயராஜ்ய நிதியைப்பற்றி அபார சிரத்தையேற்பட்டிருப்பதற் கெல்லாம் மூலகாரணம், காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசத்தை மேற் கொண்டிருப்பது தான். அடுத்தபடி, மந்திரி பதவியையும் ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்ற பிரச்சினையைக் காங்கிரஸ் தலைவர்கள் ஆலோசித்துக்கொண்டு வரவே, அவர்களுக்கு நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. பிராணபத்தான சமயத்தில் ஒரு யுக்தி தோன்றுவ துண்டல்லவா! அதுபோல காங்கிரஸ் விரோதிகளின் அதியற்புத மூளையில் ஒரு நூதன யுக்தி தோன்றியிருக்கிறது. முதலில், காங்கிரஸுக்கு நாட்டிலுள்ள செல்வாக்கையொழித்துவிட்டால், அப்புறம் லேசாக, தேர்தலில் அதைத் தோற்படித்து விடலாம் என்பதுதான். ஆகவே, அவர்கள் திலகர் சுயாராஜ்ய நிதி முதலியவைகளைப் பற்றி வீண்புகார் கிளப்பிக் காங்கிரஸ்மீது பொதுமக்களுக்கு ஒருவித தப்பபிப்பிராயமுண்டாகும்படி விஷமப் பிரசாரஞ் செய்து வருகின்றனர். மேலும், 'காங்கிரஸ்காரர்கள் அஹிம்சா தர்மிகள்; கோர்ட்டுக்குப் போகமாட்டார்கள்; ஆதலால் என்ன கூறினாலும் அவர்கள் ஒன்றுஞ் செய்ய மாட்டார்கள்' என்ற தைரியமும் அவ்வெதிரிகளுக்கு உண்டு. ஆகவே, காங்கிரஸ் விரோதிகள் இவ்வளவு துணிவாகவும், உண்மைக்கு மாறாகவும் துஷ்பிரசாரஞ் செய்து வருவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இதுதான் அவர்கள் திலகர் சுயாராஜ்ய நிதி முதலியவைகளைப் பற்றிக் கவலை கொண்டிருப்பதன் இரகசியமாகும்.

பண்டிதரின் எச்சரிக்கை

எதற்கும் ஒரு அளவுக்கு உண்டல்லவா? 'அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் விஷமாகுமன்றோ?' காங்கிரஸ் விரோதிகளின் விஷமப் பிரசாரம் அளவு கடந்து போய்விட்டது. முதலில் பண்டித ஜவஹர்லால் இவ்வீண் புகார்களுக்குச் சமாதானங் கூறி யிருந்தார். பிறகு அகில இந்திய காங்கிரஸ் மகாசபைப் பொதுக் காரியதரிசி திலகர் சுயாஜ்ய நிதியின் வரவு செலவு கணக்கை விரிவாகப் பிரசுரித்திருந்தார். இவற்றிற்குப் பின்பும் விஷமிகளின் பொய்ப்பிரசாரம் நின்றபாடில்லை. இதிலிருந்து அவர்கள் வேண்டுமென்றே புகார் கூறுகிருர்கள் எனத் தெரியவே, பண்டித ஜவஹர்லால் கடைசியாக ஒரு அறிக்கை வாயிலாக அவர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிருர். அதாவது காங்கிரஸ் நிதிக்குப் பணங் கொடுத்தவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஆபீஸுக்கு எழுதினுல் எவ்விதத் தகவலையும் தெரிவிக்கச் சித்தமா யிருக்கிருர்களென்றும், நேரேயே பார்க்க விரும்பினுல் காரியாலயம் திறந்திருக்கும் வேளையில் நோட்டீஸ் கொடுத்துவிட்டு பம்பாய் கல்பாதேவி ரோடிலுள்ள ஆபீஸுக்கு வந்து பார்க்கலா மென்றும், இனியும் விஷமமாக யாரேனுங் குறைகூறினுல், அவர்கள்மீது கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டி வருமென்றும் பண்டிதர் எச்சரித்திருக்கிருர். இதைக் கண்ட பிறகேனும் காங்கிரஸ் விரோதிகளின் வாய்க்கொட்டம் அடங்கும் என்பது திண்ணம்!

* * *

இதுதான் இந்தியருக்கு விருப்பா?

இந்தியா கவுன்ஸிலில் தமக்குக் கிடைத்துள்ள மெம்பர் ஸ்தானத்தை வகிப்பதற்காக திவான் பகதூர் இராமசாமி முதலியார் தமது குடும்பசகிதம் லண்டனுக்குக் கப்பலேறி விட்டார். அவ்வாறு இந்தியாவைவிட்டு புறப்பட்ட ஸ்ரீமான் முதலியார் கடைசியாக இந்திய மக்களுக்கு ஒரு செய்தி விடுத்திருக்கிருர். அதாவது இந்திய மக்களின் விருப்பு வெறுப்புகளை அவ்வப்போது இந்தியா மந்திரிக்குத் தெரிவிப்பதே தமது முக்கிய கடமையாக இருக்குமென்று வாக்குறுதி கூறி விட்டுச் செல்கிருர். அவ்விதம் அவர் கூறுவது உண்மையானுல், இந்தியாவுக்கு வரவிருக்கும் இந்திய அரசியல் சீர் திருத்தத்தை இந்தியமக்கள் அனைவரும் ஏகமனதாக வெறுக்கிருர்கள் என்று இந்தியா மந்திரிக்கு இவர் எடுத்துக் கூறுவாரா? இவர்தான் சமஷ்டி சீக்கிரம் அமுலுக்கு வரவேண்டும் என யோசனை கூறப்போகிறேன் என்கிறவரா யிற்றே! அப்படியிருக்க, இவர் எப்படி இந்தியமக்களின் உண்மையான அபிப்பிராயத்தைக் கூற முடியும்? முஸ்லிம் சுயேச்சைக் கட்சித் தலைவரான ஜனப் முகம்மதலி ஜின்னுகூட சமஷ்டி ஏற்படுவதை எதிர்க்கிருர். பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் விசித்திர மூளைகளிலிருந்து பிறந்துள்ள சமஷ்டித் திட்டமானது உண்மையான சமஷ்டிக்குப் பெரிய தடையாக இருக்கிறதென்பதை அறிந்தோ அறியாமலோ 'அது சீக்கிரம் அமுலுக்கு வர வேண்டுமென்று யோசனை கூறப் போகிறேன்' என்று ஸ்ரீமான் முதலியார் கூறுவாரானுல், அவர் அரசியல் கொள்கைகளில் எவ்வளவு பிற்போக்காளராக இருக்கிருர் என்பது புலனுகிற தன்றோ! இவர் போன்றவர்கள் அரசியல் தலைவர்களா யிருக்கும்வரை நம்நாட்டுக்கு விமோசனமேது?

* * *

வங்காளி மொழியில் வாழ்த்து

இந்தியாவிலேயே எல்லாத் துறைகளிலும் மிகத் தீவிரமாக முன்னேறிவரும் ஒரு சமூகத்தார் யாரென்ருல், அவர்கள் வங்காளியர் என்பதை யாரும் ஒப்புக் கொள்வார்கள். மற்ற மாகாணத்து மக்களைவிட வங்காளிகள் கல்ஞானம், அரசியல், மதம், சமூக சீர்திருத்தம் முதலியவைகளில் மிக உன்னத நிலையில் இருப்பதற்குக் காரணம் அவர்கள் தங்கள் தாய் நாட்டின்மீதும், தாய்மொழிமீதும் கொண்

டுள்ள ஆழ்ந்த பற்றேயாகும். வங்காளி மக்கள் தாய் மொழிமீது கொண்டிருக்கும் பற்றுக்கு உதாரணமாக, சமீபத்தில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. லண்டன் சர்வகலாசாலையின் நூற்றாண்டுவிழா சமீபத்தில் நடந்துவருவது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவ்விழாவுக்கு கல்கத்தா சர்வகலாசாலையின் சார்பாக அதன் உப அத்தியட்சகர் ஒரு வாழ்த்துச்செய்தி யனுப்பி யிருக்கிறார். அச் செய்தியை அவர் எம்மொழியில் எழுதியிருப்பாரென்று நினைக்கிறீர்கள்? ஆங்கிலத்திலேயே எழுதியனுப்பி யிருப்பாரென்று யாவரும் நினைப்பது சகஜமே; ஏனென்றால் வாழ்த்து அனுப்பப்படுவது லண்டன் சர்வ கலாசாலைக்கு ஆதலால் என்க. ஆனால், கல்கத்தா சர்வ கலாசாலை உப அத்தியட்சகர் அவ்வாறு செய்யவில்லை. அவ் வாழ்த்துச் செய்தியை வங்காளி மொழியில் வரைந்து அனுப்பியிருக்கிறார். இதைக்கேட்டு, தமிழ் மக்களாகிய நாம் தலைகுனிய வேண்டாமா? வங்காளிகள் கொண்டுள்ள தாய்மொழிபற்றில் ஆயிரத்தில் ஒரு கூறுகிலும் நமக்கு இருக்கிறதா? வங்காளிகள் காட்டிவரும் தாய் மொழிப் பற்றைப் போற்றும் வகையி லாயினும், தமிழ்மக்கள் தங்கள் தாய் மொழியில் பற்றுக்கொண்டு தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வேண்டுவன செய்வார்களா?

* * *

குபேர நாட்டிலும் பஞ்சமா?

உலகிலேயே மிகவும் பணக்கார தேசமென தற்போது கருதப்படுவது அமெரிக்கா நாடாகும். அங்குதான் மிஸ்டர் ராக்பெல்லர், மிஸ்டர் போர்டு போன்ற கோடீஸ்வரர்கள் ஏராளமாக இருக்கின்றனர். அதனாலேயே அந்நாட்டைக் குபேர பட்டணமென வருணிக்கப்படுகிறது. அப்பேர்ப்பட்ட நாட்டிலும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற தென்றால் யாரும் ஆச்சரியப்படாதிருக்க முடியாது. அமெரிக்காவிலுள்ள பற்பல மாகாணங்களிலும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதாம். அப் பஞ்சத்தை நிவாரணஞ் செய்து மக்களுக்கு உதவி செய்ய அந்நாட்டு விவசாய மந்திரி மிகத் தீவிரமாக வேலை செய்துவருகிறார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்டும் "கோடிக்கணக்கான மக்களுக்கு உதவிசெய்ய சர்க்கார் சித்தமா யிருக்கின்றனர்" எனப் பத்திரிகை நிருபர்கள் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். இவ்விதம் பணக்கார நாட்டில் பஞ்சம் என்றால், அந்நாட்டுச் சர்க்காரும் மந்திரிமாரும் மும்முரமாக வேலை செய்கின்றனர். தரித்திரமே தாண்டவமாடிக் கொண்டிருக்கும் நம் நாட்டிலோ, எங்கு பார்த்தாலும் பஞ்சம், பஞ்சம் என்று சதா கேட்டுக் கொண்டிருந்தாலும் சர்க்காரோ, மந்திரிமார்களோ ஒன்றும் பரிகாரந் தேடுவதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு தேர்தல் காலத்திலன்றி, மற்ற சமயங்களில் பொது மக்களைப் பற்றிக் கவலையேது?

* * *

"ஜவஹர் செய்தி" படத்துக்குத் தடை

காங்கிரஸ் மகாசபைத் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து காங்கிரஸ் பிரசாரஞ் செய்து வருவது யாவரும் அறிந்ததே. பண்டிதரின் மேற்படி பிரசங்கங்களில் ஒன்றை பம்பாய் காங்கிரஸ் சமதர்மக் கட்சித்தலைவர் ஸ்ரீமான் மஸானி "ஜவஹரின் செய்தி" என்று தலைப்பு கொடுத்து டாக்கிப்படமாக எடுத்தார். ஆனால், அப்படம் எங்கும் காட்டப்படுவதற்கு முன் பம்பாய் சினிமா சென்ஸார் போர்டார் இம் மாகாணத்தில் அது காட்டப்படக்கூடாது என்று தடுத்துவிட்டனர். அதையொட்டி, சென்னைக் கமிஷனரும், அப்படத்தைச் சென்னையில் எந்த தியேட்டரிலும் காட்டப்படுவதற்கு முன் தம்முடைய அநுமதி பெறவேண்டுமென்று அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறார். இவ்விதம் பம்பாய் சினிமா சென்ஸார் போர்டாரும், கமிஷனரும் தடைசெய்யும் வகையில், "ஜவஹரின் செய்தி"யில் என்ன இருக்கிறதோ "மிக

ட்"னுக்குத் தெரியவில்லை. பொதுவாக, சினிமா சென்ஸார் போர்டார் இதுவரை வெளிவந்துள்ள சினிமாப் படங்களைச் சென்ஸார் செய்துவரும் முறையைக் கவனித்தால் வாசகர்கள் ஒரு விஷயம் தெரிந்து கொள்ளலாம். அதாவது, சினிமா சென்ஸார் போர்டாருக்கு, காங்கிரஸ் தலைவர்களது பிரசங்கங்கள், முஸ்லீம் சமூக சம்பந்தமான விஷயங்கள்தான் ஆட்சேபமாகத் தோன்றும் என்றும், அவைகளுக்கு முறையே பொதுஜன அமைதிக்குப் பங்கமேற்படும்; முஸ்லீம்களது மதவுணர்ச்சியைப் புண்படுத்தக்கூடும் என்ற காரணங்களைச் சுலபமாகக் காட்டுவார்களென்றும் நாம் அறிந்து கொள்ளலாம். வேசைகளின் வாழ்க்கையை ஆபாசமாகச் சித்திரித்துக் காட்டும் படங்களும், அரை நிர்வாண நடனப் படங்களும், கீழ்த்தரமான சம்பாஷணையும் காட்சியும் பொதிந்த படங்களும் அவர்களது கண்களுக்குப் படுவதேயில்லை. அவை அவர்களுக்கு ஆட்சேபகரமாகத் தோன்றுவதுமில்லை. இதிலிருந்து சினிமா சென்ஸார் போர்டாரின் விபரீத போக்கு புலனாகிறதன்றோ!

* * *

பீஹார் மந்திரியின் பரோபகாரம்

பீஹார் மாகாணத்திலுள்ள மந்திரிகளிலொருவரான ஸர். கணேச தத்தர் என்பவர் தாம் வாங்கும் சம்பளத்தில் பெரும் பகுதியை, ஏழை எளியவர்களுக்குச் செலவழித்துவருகிறார் என்ற செய்தி 'அமிர்தபஜார்' பத்திரிகையில் வெளியாயிருக்கிறது. ஆனால், சென்னை மந்திரிகளில் எவரேனும் இவ்வித பரோபகார சிந்தனையோடு நடந்து கொள்கிறார்களா? என்றால் அதுதானே இல்லை.

"என்ன ஐயா அனியாயம்! இங்கே விட்டிருந்த என் மோட்டாரையே காணோமே!"

"உம். உங்களதுதானா அது? இங்கே அதை அதிக நாழி நிறுத்தி வைத்திருந்ததற்காக உங்களை அரஸ்ட் செய்ய உத்தரவு!"

சீமாட்டி கார்த்தியாயினி

("ஜீவா")

காந்திமதி நாதம் பிள்ளை துயரங் கலந்த குரலில், "கார்த்திகா! உனது ஆத்ம சாந்திக்கான காரியங்களைக் கெடுக்க விரும்பவில்லை; அதில் தலையிடவும் எனக்கு உரிமை கிடையாது. ஆயினும், நான் வெளித் தோற்றங்களைப் பற்றியே சிந்திக்கிறேன். ஏனென்றால் ஜனங்கள்........................" என்று கூறிக் கொண்டே வந்தார்.

இதற்குள் கார்த்தியாயினி பொறுமையிழந்தவளாய் இடையே குறுக்கிட்டு, "தாங்கள் எப்போதும் வெளித் தோற்றங்களைத்தான் கவனிக்கிறீர்கள்" எனக் குத்தலாக மொழிந்தாள்.

"ஏனென்றால், ஜனங்கள் வெளித் தோற்றங்களைக் கண்டே வம்பளக்கிறார்கள்—" எனத் திவான்பகதூர் பிள்ளையவர்கள் தாம் முன் கூறியதையே அநுவதித்து மேலும் பேசத் தொடங்கி, "அதிருக்கட்டும்; நான் இப்போது சர்க்கார் மசோதா ஒன்றின் மீது வேலை செய்து வருகிறேன். அதற்காக, என் முழுக் கவனத்தையும், ஆற்றலையுஞ் செலுத்த வேண்டியிருக்கிறது. இவ்வித நெருக்கடியான சமயத்தில் உன் விஷயம் எனக்கு மிகுந்த ஆயாசத்தைத் தருகிறது" என்று கூறி முடித்தார்.

கார்த்தியாயினி ஆத்திரம் பொங்க, அப்படியானால், "நான் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்டாள்.

காந்திமதி நாதம் பிள்ளை நிதானமாக, "ஆம். விஷயத்தை உனக்குத் தெளிவாக விளக்கிக் கூற வேண்டியது அவசியம். முதலாவது நீ உன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்; இரண்டாவது, உன் நடத்தையைப் பற்றிப் பொது ஜனங்கள் அவதூறு கூறுவதன் பயனாக, உன் குமாரனது எதிர்கால நிலை என்னாகும்? என்பதையுஞ் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மூன்றாவது, உன் குடும்ப கௌரவத்துக்கும் என் குடும்ப கௌரவத்துக்கும் என்றும் மாறாக் களங்கம் ஏற்படுவதோடு, எனக்கும், உன் சகோதாருக்கும் தலை குனிவும் பழியுமே ஏற்படும். இந் நிலைமை இன்னும் விபரீதமாகப் போனால், நாங்கள் இருவரும் எங்களது பெரும் பதவிகளைச் சந்தடியின்றி ராஜிநாமா செய்துவிட்டு வந்து மூலையில் உட்காரத்தான் நேரும். அப்

புறம் நாங்கள் வெளியில் தலை காட்டவே முடியாது. எங்கள் பொது வாழ்வு அஸ்தமித்தாற் போலத்தான். இவைகளை யெல்லாம் கார்த்திகா! நீ யோசித்துப் பார்.— ஆகவே, நீ இனி சிவசைலம் இங்கிருந்து போகும் வரை அவனிடம் பேசலாகாது, பார்க்கவும் கூடாது. தெரிகிறதா?—மற்றப்படி நான் அவன் ஊருக்கு எவ்வளவு சீக்கிரம் திரும்ப வேண்டுமோ அதற்கு வேண்டிய வழியைத் தேடுகிறேன்" என்று கூறினார்.

கார்த்தியாயினிக்கு பிள்ளையவர்கள் மொழிந்த ஒவ்வொரு வார்த்தையும் புண்ணில் வேல் நுழைவது போலிருந்தது. கோபத்தால், அவள் முகஞ் சிவந்தது. இதழ் துடிதுடித்தது. ஏதோ பதில் கூற முயன்றாள். ஆனால் அவளால் முடியவில்லை. கடைசியாக அவள் தலை குனிந்து நின்றாள்.

காந்திமதிநாதம் பிள்ளை அவளது நிலைமையை ஒருவாறு உணர்ந்தார். மேலும், அவளைச் சங்கடத்திற்குள்ளாக்க அவரது ஈர நெஞ்சம் விரும்பவில்லை. எனவே, அவர் அதற்குமேல் ஒன்றும் பேசாது அவளது அறையை விட்டு வெளியே சென்றார்.

* * *

மறுநாள் இரவு பத்து மணி யிருக்கும். பங்களாவில் அமைதி குடி கொண்டிருந்தது. வேலையாட்களில் தங்கள் வீடுகளுக்குச் செல்பவர்கள் போக, பங்களாவிலேயே இருப்பவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களில் உறங்கிக் கொண்டிருந்தனர். திவான்பகதூர் காந்திமதிநாதம் பிள்ளை இன்னும் பங்களாவுக்குத் திரும்பி வரவில்லை யாதலால், வாயில் காவலாளன் மட்டும், வெளி வாயிற் கதவை உள் தாளிடாமல் வெறுமனே சாத்திவிட்டு, அதன் பக்கத்திலேயே உட்கார்ந்து தூங்கி விழுந்து கொண்டிருந்தான்.

மேன் மாடியில் கார்த்தியாயினியின் படுக்கை யறையில் மட்டும் மின்சார விளக்கு மிகப் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. கார்த்தியாயினி பரபரப்பாக அவ் வறையில் உலாவிக் கொண்டிருந்தாள். அவளது மனம் நிம்மதியில்லா திருப்பதை முகம் பளிங்கு போல் எடுத்துக் காட்டியது. அறையின் வலது பக்கத்து ஓரமாக ஜன்னலை யடுத்தாற் போல் போடப்பட்டிருந்த பஞ்சணை மீது கார்த்தியாயினியின் அருமைக் குமாரன் அம்பிகாபதி படுத்திருந்தான். அவன் சிறிது கண் மூடுவதும், பிறகு விழித்துக் கொண்டு "அம்மா! அம்மா!!" என்று கூப்பிடுவதுமாக இருந்தான்.

அம்பிகாபதி கார்த்தியாயினியை அழைக்கும் போதெல்லாம் அவள் தன் சிந்தனையை விட்டுப் பரிந்தோடி வருவாள்; பஞ்சணை மீது அமர்வாள். தன் அருமருந் தன்ன மகனை யணைத்துக் கொள்வாள். தலைக்கும் காலுக்கும் மட்டுமன்றி இரு பக்கங்களிலுங் கூட தலையணைகளைச் சேரப்போட்டு முதுகில் மெதுவாகத் தட்டி அவனைத் தூங்க வைக்க முயன்று கொண்டிருந்தாள்.

ஆனால் சிறுவனோ உறங்காமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். அத்துடனின்றி, அவன் தன் தாயைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "அம்மா! என்னோடே படுத்துக்கோயேன் அம்மா!" எனக் குதலை மொழியால் கொஞ்சலோடு கூறினான்.

"கண்ணு! நீ தூங்கம்மா!—அப்பா வாவில்லையோ யில்லையோ; அவர் வந்தூட்டா உன்னோடே வந்து படுத்துக் கொள்கிறேன். நீ தூங்கு" எனக் கார்த்தியாயினி சிறுவனுக்குச் சமாதானங் கூறித் தூங்க வைக்க முயன்றாள்.

"அப்பா, ஏம்மா! இன்னம் வால்லை."

"கவர்னர் வீட்டிலே ஏதாச்சும் ஜோலி யிருக்கும்."

"ஊம்.................."

"ஊம்; அதான்.—நீ தூங்கு அம்பி; சீக்கிரம் தூங்கினாதான் காலைலே உனக்குப் பட்சணம் கொடுப்பேன்."

"இல்லாட்டா நேக்கு பட்சணம் கொடுக்கமாட்டா யாம்மா!"

"ஊஉம்; மாட்டவே மாட்டேன். எதோ, கண்ணை மூடிக்கோ; தூங்கு" எனக் கார்த்தியாயினி அன்பாக வற்புறுத்தினாள்.

தாய் கூறிய வண்ணமே கண்ணை மூடிக் கொண்டு உறங்க முயன்ற அம்பிகாபதி, திடீரென விழித்துக் கொண்டு துள்ளி யெழுந்து தன் பக்கத்திருந்து நகர்ந்து எழவிருந்த கார்த்தியாயினியை, கையைக் கெட்டியாகப் பற்றி யிழுத்து, "ஏம்மா! என்னை ஏமாத்திட்டு போவல்லியோ பார்க்கிறே!—நேக்கு மூத்தி கொடுத்தியோ! நான் தூங்கறத்துக்கு முன்னே நீ மூத்தி கொடுக்கிறது வழக்கமல்லையா! நீ கொடுக்காட்டி நான் எப்படி தூங்குவேன்!" என்று தான் ஏதோ பெரிய அதிசயத்தைக் கண்டு பிடித்தது போல் சந்தோஷித்துக் கேட்டான்.

கார்த்தியாயினியின் அப்போதைய மனநிலை சரியா யில்லாதிருந்தும், அம்பிகாபதியின் களங்கமில்லா மழலைப் பேச்சு அவளை வாய் விட்டு சிரிக்க வைத்து விட்டது. "என் ராஜா? உன்னையா நான் ஏமாத்திறேன்? நீ தானே மறந்துட்டே!—இதோ! இந்தா முத்தம்!" எனக் கூறிய வண்ணம் தனயனை வாரி யெடுத்து முகத்திலும் கன்னத்திலும் நெற்றியிலுகாக மாறி மாறி முத்தமிட்டு முத்தமழை பொழிந்தாள்.

அம்பிகாபதி தன் தாயின் அன்பான முத்தங்களால் குதூகல மடைந்தான். அவள் கூறியபடி அவன் படுக்கையில் சாய்ந்து கண்ணை மூடினான். உடனே ஏதோ நினைத்துக் கொண்டு எழுந்துட்கார்ந்து, "அம்மா கடவுளைப் பிரார்த்திக்க மறந்தே போயிட்டேன். பார்த்தியா அம்மா!—ஏம்மா! சுவாமியை நினைச்சுக் கும்பிடா புட்டா, அவர் நம்ம மேலே கோவிச்சிக்குவார் இல்லேம்மா!..........." என்று கேட்டான்.

கார்த்தியாயினி புன் சிரிப்போடு தலையை யசைத்து; "ஆமாம்" என்றாள்.

அம்பிகாபதி "அப்படியானால் இதோ கும்பிடறேம்மா!..............."எனக் கூறி நிமிர்ந்துட்கார்ந்து கைகளைக் கூப்பிக் கொண்டு, கண்களை மூடிய வண்ணம்,

"அரும்போனே! மணியே! என் அன்பே"

என்ற பாட்டை தத்தித் தடுமாறிப் பாடி முடித்து, "சுவாமி! என்னையும் எங்க அம்மாவையும் அப்பாவையும் காப்பாத்தணும்" என்று பிரார்த்தித்துவிட்டு, அப்படியே படுத்தான். தன் மகனது நுண்ணறிவையுஞ் செயலையுங் கண்டு கார்த்தியாயினி ஆனந்தக் கண்ணீர்விட்டு தன்னை மறந்து உட்கார்ந்திருந்தாள்.

அம்பிகாபதி கண்களை இறுக மூடிக் கொண்டான். சிறிது நேரத்திற் கெல்லாம் அவனுக்கு உண்மையாகவே உறக்கம் வந்துவிட்டது. ஆனால் அவன் வாய்மாத்திரம் ஏதோ பிதற்றிக் கொண்டிருந்தது.

உலாவுவதுபோல் சில விநாடிகள் பாவனை செய்து கொண்டிருந்த கார்த்தியாயினி குழந்தை உறங்கிவிட்டா னென்றறிந்ததும் மங்கலாகப் பிரகாசிக்கும் ஒரு நீலநிற மின்சார விளக்கை மட்டும் விட்டு, மற்ற மின்சார விளக்குகளை அணைத்துவிட்டாள். அப்புறம் அவள் மெள்ள அறையைவிட்டு நடந்து கதவண்டை போனாள்.

"அம்மா! அம்மா!" என அம்பிகாபதி மெதுவாகக் கூப்பிடுங் குரல் கேட்டு கார்த்தியாயினி திடுக்கிட்டுத் திரும்பினாள். மீண்டும் மெள்ள நடந்து பஞ்சணையருகு வந்து தன் குமாரனது முகத்தை உற்று நோக்கினாள். அவன் நல்ல தூக்கத்திலாழ்ந்திருந்தான். எனினும் அவனது வாய் அப்போதும் 'அம்மா!' எனக் கூறிக் கொண்டிருந்தது. ஆனால் அது கிணற்றி னுள்ளிருந்து கூப்பிடுவதுபோல் அவ்வளவு மெதுவாகக் கேட்டது. எனவே, கார்த்தியாயினி மீண்டும் சந்தடியின்றி நடந்து அறையைக் கடந்து அறைக் கதவை ஓசைபடாது மூடினாள். பிறகு அவள் அப்படியே நடந்து சென்று தன் கணவன் படுக்கை யறையைப் பார்த்தாள். அது வெளியே தாளிடப்பட்டிருந்தது. அதன் பின்னர், அவள் ஜன்னல் வழியாக பங்களாவின் முன் பக்கத்தைக்

கூர்ந்து பார்த்தாள். வாயிற் காவலாளன் அப்போதும் வெளிவாயிற் கதவருகே அமர்ந்து, மூதேவியோடு உறவு கொண்டாடிக் கொண்டிருந்தான்.

பிறகு, கார்த்தியாயினி மெத்தைபடி வழியாகக் கீழிறங்கினள். அங்கும் அமைதி குடிகொண்டிருந்தது. 'டிக் டிக்' என்ற கடியாரத்தின் சப்தமும் இரண்டொரு விசாடிக் கொருதாம் வேலைக்காரர்கள் குறட்டைவிடும் சப்தமுமே கேட்டுக் கொண்டிருந்தது. எனவே, இன்னும் தன் கணவன் வரவில்லை என்பதை யறிந்தாள். கூடத்தில் மாட்டப்பட்டிருந்த கடியாரத்தைப் பார்த்தாள். பதினொன் றடிக்க இருபது நிமிஷம் இருந்தது. 'கவர்னர் மாளிகையில் இன்று விருந்தும் நடனமும் அல்லவா! அவை முடிய பன்னிரண்டு அல்லது ஒரு மணிகூட ஆய்விடும். எனவே, அவர் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரத்துக்கு மேலிருக்கிறது' என அவள் தானகவே கூறிக்கொண்டாள். அப்புறம் அவள் ஏதோ திருப்தி யடைந்தவள்போல தலையை யசைத்துவிட்டு மாளிகையின் பின்புறமாக நடந்து புறக்கடை கதவைத் திறந்துகொண்டு அதைப் பழையபடி மெதுவாக மூடிவிட்டுக் கீழிறங்கித் தோட்டத்தை யடைந்தாள்.

உடனே சிறிது தூரத்தில் பளிங்கு மேடையில் உட்கார்ந்திருந்த ஒரு உருவம், "கார்த்திகா! பிரியா! ஏன் இவ்வளவு நேரம்?" என்று கேட்டுக்கொண்டே தாவி யோடி வந்து அவளை ஆர்வத்தோடு தழுவிக்கொண்டு முத்த மழைபொழிந்தது.

கார்த்தியாயினி அவ்வுருவத்தின் அன்புப் பிணைப்பில் கட்டுண்டு தன்னை மறந்து நின்றுள். எனினும், அவ்வுருவம் இவ்விதம் ஆலிங்கனஞ் செய்யும் என்பதைச் சிறிதும் எதிர்பாராதவள் போலவும், விரும்பாதவள் போலவும் பாவனை செய்து, தன்னை ஆர்வத்தோடு தழுவி நிற்கும் அவ்வுருவத்தின் கைகளை விலக்க முயன்று கொண்டே, "சிவா! இது என்ன? நான் பிறனொருவனுக்கு சொந்தமான பொருள் என்பதையும் மறந்து, என்னைச் சூறையாட ஆரம்பித்து விட்டாயே! இது நியாயமா?" எனச் சிரித்துக்கொண்டே கார்த்தியாயினி கேட்டாள்.

அவ்வுருவம் நமது கதாநாயகன் சிவசைலம்தான். 'கிரிக்கெட் டோர்ன்மெண்டு'க்காக வந்தவன் இன்னும் ஊர் திரும்பவில்லை யென்பதுதான் வாசகர்களுக்குத் தெரியுமே! இப்பங்களாவின் முன் பக்கத்தில் கீழே உள்ள அறைகளில் ஒன்று அவன் தங்கி யிருப்பதற்காக ஒதுக்கிவிடப் பட்டிருந்தது. வேலைக்காரர் களெல்லாம் தூங்கப் போய்விட்ட பின்னர், இவன் அறையைவிட்டு மெள்ள வெளிப்பட்டுப் பங்களாவுக்குப் பின் பக்கம் போய் கார்த்யாயினிக்காகக் காத்திருந்தான்.

எனவே, சிவசைலம் கார்த்தியாயினிக்குப் பதிலாக, "திருடனுக்குத் தன் சொத்து, பிறர் சொத்து என்று கூட உண்டா? அவனுக்கு நியாய அநியாய மேது?" என்று கூறினன்.

"ஆம். நீ திருடன் தான்; காதல் திருடன் தான்; அதில் சந்தேகமேயில்லை. —இல்லாவிட்டால் நீ என்னை இவ்வளவு தூரம் பிச்சியாக்கி யாட்டி வைப்பாயா? முதலில், என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாய். பிறகு உயிரைக் கவர்ந்து கொண்டு விட்டாய். கடைசியாக, இப்போது இவ்வுடலையும் உன் வசப்படுத்தி விட்டாய். இனி, எனக்கென்று என்ன மீதி வைத்திருக்கிருய்?" எனக் கார்த்தியாயினி கூறிய வண்ணம் அவன் மார்பின்மீது சாய்ந்தாள்.

சிவசைலம், அவளை மேலும் இறுகக் கட்டி யணைத்துக்கொண்டு, "கண்ணே! எனக்குச் சரியான பட்டப் பெயர் கொடுத்தாய். காதல் திருடன் என்பது முற்றும் தகும்; தகும்" என்று மொழிந்து அவளது செவ்விதழ் மதுரங்களில் அழுந்த முத்தமிட்டான். கார்த்தியாயினி உடல் பூரித்தாள். அவளது மார்பு விம்மி விம்மி யடங்கியது. அவள் தனது கையால் அவனது கபோலத்தைத் தடவிக் கொடுத்த வண்ணம் அவனோடு மெல்ல நடந்து அருகிருந்த பளிங்குக் கல்லின்மீது அமர்ந்தாள்.

"அதிருக்கட்டும் சிவா! இந்நேரத்தில் என்னை இங்கு சந்திக்கும்படி கூறியழைத்தது எதற்காக? என்னை முற்றும் மயக்கி காதற்கடலில் தள்ளுவதற்காகவா? என்னோடு சரசமாடுவதற்கு இதுதானா சமயம்?" என்று கொஞ்சுதலாகக் கேட்டாள்.

சிவசைலம் அவள் பக்கத் தமர்ந்து தோளின்மீது கைபோட்ட வண்ணம், "நான் நாளைக்கு ஊருக்குப் போகலாமென்றிருக்கிறேன். இதற்குள் உன்னிடம் பேசி நமது காதல் சம்பந்தமாக, ஒரு முடிவுக்கு வருவதற்காகவே உன்னைக் கூப்பிட்டேன்—கார்த்திகா! கண்ணே! உன்னிடம் என் மனதைத் திறந்து பேசுகிறேன்.—நீ இல்லாது நான் இனி உயிர் வாழ முடியாது என முன்னமேயே கூறியிருக்கிறேன். நீ உன் கணவனைவிட்டு என்னோடு வந்துவிடுவதா யிருந்தால், உனக்காக என் வாழ்க்கையையே அர்ப்பணஞ் செய்யத் தயாரா யிருக்கிறேன். மற்ற உண்மைக் காதலர்கள்போல் நாமும் யாதொரு தடையுமின்றி இன்ப வாழ்க்கையை இனிது நடத்துவோம். இதில் ஏமாற்று ஒன்றுமில்லை; நம்பிக்கைத் துரோகமோ, தப்பி யோடிப் போதலோ கிடையாது. என்ன சொல்லுகிறாய் கண்ணே!" என இரக்கமாகக் கேட்டான்.

கார்த்தியாயினி ஆழ்ந்த யோசனையோடு, "சிவா! என் கணவரோடு கூடி வாழ்வதில் எவ்வளவு தூரம் பற்றுகொண்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? நான் என் கணவரை உள்ளூற வெறுத்து வருகிறேன். அவரது ஒழுக்க சீலத்தை வெறுக்கிறேன்; அவரது கௌரவத் தன்மையை வெறுக்கிறேன். அவரது ஒவ்வொரு நடத்தையையும் வெறுக்கிறேன். ஆனால். எனது அருமைப் புதல்வன் அம்பிகாபதியை என்னால் விட்டுப் பிரிய முடியாது" என்று உருக்கமாகக் கூறினாள்.

* * *

இக்காதலர்களை இந்நிலையி லேயே விட்டுவிட்டு பங்களாவின் முன் பக்கத்துக்குப் போவோம். பதினொன்றரைமணி யிருக்கும். ஒரு மோட்டார் விரைவாக வந்து இப்பங்களாவுக்கு எதிரே வந்து நின்றது. டிரைவர் ஹாரன் அடித்தான். இச்சப்தத்தைக் கேட்டு தூங்கி யாடிக்கொண்டிருந்த காவலாளி திடுக்கிட்டு விழித்து எழுந்து வாயிற்கதவைத் திறந்தான். உடனே மோட்டார் உள்ளே நுழைந்து மாளிகையின் முன் நின்றது. அடுத்து மோட்டார் கதவு திறக்கப்பட்டு, காந்திமதிநாதம் பிள்ளை கீழே இறங்கி மாளிகையினுள் புகுந்தார். இதற்குள் வேலையாட்களெல்லாம் துடிதுடித்து எழுந்து பயபக்தியுடன் நின்றனர்.

காந்திமதிநாதம் பிள்ளை மாளிகையினுள் நுழையும்போதே, சிவசைலம் தங்கியிருந்த அறையைச் சந்தேகப் பார்வையோடு பார்த்துக்கொண்டே நேராக மேன்மாடிக்குச் சென்றார். தலைப்பாகையையும், கோட்டையும் ஒன்றன் பின்னொன்றாகக் கழற்றிக்கொண்டே, கார்த்தியாயினியின் படுக்கை யறைக்கு அடிமேலடி வைத்துச் சென்றார். கதவின்மீது கையை வைத்தழுத்தினார். அது உடனே திறந்துகொண்டது. ஆச்சரியமும், துடிதுடிப்பும் அவர் தேகத்தை அசைந்தாடச் செய்தது. கோட்டை ஒரு பக்கம் வீசி யெறிந்துவிட்டு, அவ்வறையினுள் நுழைந்தார். நீல நிற மின்சார விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. பஞ்சணையருகு சென்று பார்த்தார். அம்பிகாபதி மட்டும் படுத்துறங்கிக் கொண்டிருந்தான். அவனது வாய் அப்போதும் "அம்மா! அம்மா!" என மனனஞ் செய்து கொண்டிருந்தது. கார்த்தியாயினியைக் காணாதுபோகவே, அவருக்குச் சந்தேகம் அதிகமாய்விட்டது. உடனே பரபரப்பாக வெளியே வந்து கிழக்கு பக்கமாகக் கடைசியி லிருந்த தாழ்வாரத்தில் உள்ள ஜன்ன லண்டை சென்றார். திரையை ஒரு பக்கமாகத் தள்ளினார். அந்த ஜன்னல் வழியாகத் தோட்டத்தைக் கீழே நோக்கினார். அவர் கண்கள், சிவசைலமும், கார்த்தியாயினியும் ஒரு பளிங்குக் கல்லின்மீது அமர்ந்து பேசிக்கொண் டிருப்பதைக் கண்டுவிட்டன. உடனே அவரது தேகம் படபடத்தது. ஆத்திரம் பொங்கி யெழுந்தது.



மூட்டைப்பூச்சிகளுக்கு வந்தனம்

—(0)—

(பி. பரிமணப் பல்லவராயர்.)

தாது வருஷம் பிறந்த நான்காம் நாள். வியாழக்கிழமை இரவு. முன்னேரம் எட்டு மணிக்கு இரவு ஆகாரம் அருந்தினேன். "உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டு" அல்லவா! படுக்கையில் படுத்து சற்று இளைப்பாறினேன். சுகாதார முறைப்படி சாப்பிட்டவுடன் படுத்தல் கூடாதென்பது அறிந்தவன்தான். அன்றியும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு இதைப் போதித்தலும் உண்டு. எனினும் "நான் சொல்லுகிறபடி நீ செய். நான் செய்கிறபடி நீ செய்யாதே" என்பதும் அநுபவப் பழமொழி யாயிற்றே. எனக்கு ஒரு தொழிலல்ல; இருதொழில்—உத்தியோகங்கள். அநேகமாக பகல் 8, 9-மணி நேரங்கள் நாற்காலியில் உட்கார்ந்திருக்க வேண்டியவன். ஆதலால் சற்று உலாவவோ உட்கார்ந்திருக்கவோ இயலாதவன். நாற்பது வயதுக்கு மேற்பட்டவனு மாவேன். ஆதலாலேயே சாப்பிட்ட களைப்பைப் படுப்பதன்மூலம் மாற்றி இடுப்புக்குச் சற்று ஓய்வு கொடுக்க நேர்ந்தது.

அதன் பின்னர், மனைவி உண்டு, ஒதுங்க வைத்து சற்றும் படிக்க ஆரம்பித்ததும் அதிலேற்படும் சிறு பிழைகளைத் திருத்தி வரலானேன். மனைவியின் இவ்வேலை முடிந்ததும், சிக்கனத்தால் ஒரே அமெரிக்கன் லைட்டை இப்படிப்பட்ட சமயங்களில் உபயோகிக்க நேர்ந்ததால் அதே லைட்டை என் படுக்கையண்டையான் எடுத்து வைத்துக்கொண்டு, என் நண்பர் வேண்டிக்கொண்டிருந்த நெடுநாள் வேண்டுகோளை இன்றாவது பூர்த்தி செய்யலா மென்று ஒரு பத்திரிகைக்குக் கட்டுரை எழுத ஆரம்பித்தேன். காகிதம் பேனா இங்கி பாட்டில் அட்டை முதலியவைகளை எடுத்துகொண்டேன். கட்டுரைக்குக் காரணமாய் அகப்பட்ட நேற்றைய வர்த்தக மொன்றை நினைவுக்குக் கொண்டு வந்து "வர்த்தகரிடம் நம்பிக்கைக் குறைவு" என்ற கட்டுரையை எழுதி முடித்தேன். இதற்கிடையில் மூட்டைப் பூச்சியின் கடி தாங்கமாட்டாமல் என் மனைவி அடிக்கடி தன் படுக்கையினின்று எழுந்து, என் படுக்கையின் பக்கத்தில் வைத்திருந்த மூட்டைப்பூச்சி மருந்து டப்பியை எடுத்துத் தன் படுக்கையில் தெளிப்பதும் படுப்பதுமாக இருந்தபடியே சுமார் 11-30 மணிக்கு நித்திரையின் வயமாயினள். யானும் லைட்டை நிறுத்திப்படுத்துக் கண்ணை மூடினும் மூட்டைப்பூச்சி என்னையும் விட்டபாடில்லை. ஏற்கனவே நானும் என் படுக்கையிலும் சிறிது மருந்தைத் தெளித்திருந்தாலும் மறுபடியும் சிறிது தெளித்துப் படுத்தேன். "போதாதற்குப் பொன்னியம்மன் குறை" என்றபடி, கருஞ்செள்ளுகள் வேறு சிட்டுக்குருவிகள்போல் பறந்து பறந்து மேலே முழுவதும் கடிப்பதும், படுக்கையிலும் உபத்திரவிப்பதும் சேர்ந்து கொண்டதால் நித்திரையின் ஜம்பம்—பெரியவ

ளின் சமர்த்து—அக்காளின் ஆண்மை என்னிடம் பலிக்கவில்லை.

இங்கு ஒரு சந்தேகம் பிறக்கிறது. கர்ப்பம் இல்லாமலே பிறப்பு ஏற்பட்டு விட்டது. அது எதனால் என்று என்னைக் கேட்டு விடாதீர்கள். ஆண்களுக்களுக்குத்தான் ஆண்மையா? பெண்களுக்கும் ஆண்மை உண்டா? பெண்கள் பேதைகள் ஆதலால், பெண்கள் பேதமையாகிய பெண்மையை உடையவர்கள் தானே. "பேதமை யென்பது மாதர்க் கணிகலம்" என்பது ஔவையின் திரு வாக்கு அன்றோ! இதை நான் இந்த இருபதாம் நூற்றாண்டில் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால் இந்த இருபதாம் நூற்றாண்டின் பெண்மணிகள் அவ்விதம் சொன்னதே பேதமை யென்றும், அந்த ஔவை இப்போதிருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளாமல் அப்புறம் இப்புறம் நகர விடமாட்டார்களென்பது நிச்சயத்திலும் நிச்சயம். ஆகவே, ஆண்மை என்பது ஆண்களுக்கு மட்டும் உரியதென்று ரிஜிஸ்தர் செய்யப்பட்டு விடவில்லை. ஆண்மையாகிய தைரியம், வீரம் என்பன ஆண் பெண் இருபாலாருக்குமே உரியன என்பது தமிழ்நாட்டு பண்டைய வீரமாதர்களது சரிதமே தெள்ளிதின் விளக்குவனவாகும். என் கதை எங்கேயோ ஆரம்பித்து, எங்கேயோ போய்விட்டது. எங்கும் போகவில்லை, காகிதத்தில்தான் இருக்கிறது என்று சொல்லி விடாதீர்கள்—கேலி செய்யாதீர்கள். அப்படிச் செய்தால் அதற்கு நான் வேலிபோட்டு விடுவேன். அடைத்த வேலியைத் தாண்டுபவர்கள் ஆகாத பாபத்தில் போக நேரிடும்.

எனவே, என்னைத் தூக்கத்தினுல் தூங்கவைக்க முடியாமற் போகவே—தூக்கத்தினுல் என்னை ஏமாற்ற முடியாமற் போகவே மற்றும் என்ன செய்யலாமென்று யோசித்தேன். திருவெறும்பூர் ஆரம்பாசிரியர் சங்கக் காரியதரிசிக்கு ஒரு கடிதம் எழுதலாமென்று 4, 5 நாட்களாய் நினைத்திருந்தது இதுவரை மறந்து போய்க் கொண்டிருந்தது. அது இச் சமயத்தில் நினைவுக்கு வரவே அதனையும் எழுதி முடித்தேன். அதனை எப்படி செலவில்லாமல் அனுப்புவதென்றும் யோசித்து முடிவு செய்தேன். பிறகு சிறிது சித்திரையின் கண்டாமணியாகிய கொட்டாவி வரவே லைட்டை அணைத்துப் படுத்தேன். "கொடாக் கண்டனைத் தொடர்ந்த விடாக்கண்ட"னைப் போல், நீ என்ன தூங்கப் பார்த்தாலும் உன்னைத் தூங்க விடமாட்டேனென்று மூட்டைப் பூச்சிகள் முணு முணுவென்று கடிக்க ஆரம்பித்தன. உடனே பக்கத்திலிருந்த தீப்பெட்டியை யெடுத்து லைட்டைப் பொருத்தினேன். இது சரியா? விளக்குப் பொருத்தினேன், விளக்கு ஏற்றினேன். தீபம் ஏற்றினேன் என்றெல்லாம் என்னென்னமோ மாதிரியெல்லாம் சொல்லுகிறார்களே அது சரியா? நீங்களே யோசித்து முடிவு செய்து எனக்குக் கூறுங்கள். எனக்கோ நேரமில்லை. ஏதாவது ஒன்று சரியா யிருந்தாலும் சரி, இல்லாவிட்டால் எல்லாம் சரியா யிருந்தாலும் சரியே. உங்களுக்கு இதற்காக என் வந்தனம் உரியதாகுக.

மறுபடியும் கொஞ்சம் மருந்தைப் படுக்கையில் தூவினேன். தூக்கம் வருவதாயில்லை. மூட்டைப்பூச்சிக்கும் எனக்கும் யாதொரு வருத்தமோ சண்டையோ மனஸ்தாபமோ, புதிதாகவோ பழையதாகவோ எல்லார் மேலும் ஆணையாக கிடையவே கிடையாது. ஒருகால், பெரிய அக்காளாகிய நித்திராதேவியாகிய தூங்குமூஞ்சிக்கும் மூட்டைப்பூச்சி அண்ணுத்தைகளுக்கும் வருத்தம் கிருத்தம், சண்டை கிண்டை, மனஸ்தாபம் கினஸ்தாபம் உண்டோ என்னமோ அது எனக்குத் தெரியாது. அது தெரிய வேண்டுமானுல் நாரதரையாவது சேதலையாவது கேட்டுப் பாருங்கள்—தெரிந்து கொள்ளுங்கள். அந்த விஷயத்தில்—அதைத் தெரிந்து சொல்லும் காரியத்தில் நான் தலையிட்டுக் கொள்ளவே மாட்டேன். மாட்டேன் மாட்டேன். மாட்டவே மாட்டேன் போதும் போதும். இந்த மூட்டைப்பூச்சிகளிடத்தில் நான் இப்

போது படும்பாடு. அந்த வருத்தத்தை வேறு நான் சம்பாதித்துக் கொண்டால் இந்தப் பூலோகத்தில் இந்த மூட்டைப் பூச்சிகள் என்னை உயிரோடு வைக்க மாட்டா. இவைகளுக்குப் பயந்து அந்த தேவலோகத்திற்குப் போகலாமென்று போனாலோ அந்த (நித்திரா) தேவி வைக்க மாட்டாள். ஆகவே, அது உங்களுடைய பொறுப்பு. என்னுடைய பொறுப்புமல்ல, என்னுடைய ஜவாப்புமல்ல.

பிறகு என்ன செய்தேன் தெரியுமா? ஒரு தினசரிப் பத்திரிகையிலிருந்து கல்வி சம்பந்தமான சில குறிப்புகளைச் சமய சஞ்சீவியாக இருக்கட்டும்–உபயோகப் படும் என்று எழுதி வைக்கலானேன். மறுபடி வெளிச்சத்தை அகற்றிப் படுத்தேன். பாரிய நேயர்களைப்போல–வெகு காலைய சிநேகிதர்களைப்போல மூட்டைப் பூச்சி முத்தண்ணாக்கள் எழும்பின. மனைவி சொல்லைத் தட்டினாலும் தட்டலாம், இந்த மகானுபாவர்கள் இம்சையைப் பொறுக்கவா முடியும்! அல்ல அல்ல, இன்பத்தை, அல்ல அல்ல துன்பத்தைத் தாங்கவா முடியும்? முடியவே முடியாது, எவராலும் முடியாது. முடியாததனால் மறுபடியும் ஒரு தீக்குச்சிக்குச் செலவு வந்ததே யென்ற எண்ணத்தோடு—'வாவென்றால் வாரா, போவென்றால் போகா' என்பதுபோல், வருவது வந்தே தீரும் என்ற நினைப்போடு சூரியன் குஞ்சை வரவேற்று, ஆரம்பத்தில் எழுதிய 'விடாபார்'க் கட்டுரையில் செய்ய நினைத்த சிறு திருத்தங்களை—படுக்கையில் படுத்தபடி தூக்கம் வாராததால் உத்தேசித்தவைகளைச் செய்தேன். கடிகாரத்தில் மணியும் 12 ஆயிற்று. 12 ஆயிற்றே! தூக்க முடியவில்லையே யென்ற வருத்தத்தோடு வழக்கம்போல் விளக்கை அணைத்துப் படுத்தேன். கஷ்டத்துக்குமேல் கஷ்டமாகத் தூக்கத்துக்குப் பங்கம் வரவே என்ன செய்யலாமென்று எண்ணாதும் எண்ணினேன். இன்றைய இரவின் இந்த சம்பவங்களைத்தான் ஒரு கட்டுரையாக–தமாஷ் கதையாக எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பலாமேயென்று ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். வந்தது தான் தாமதம். லைட்டை யெடுத்துப் பொறுத்தினால் வெளிச்சம் குறைய ஆரம்பித்தது. உடனே பக்கத்து அறையைத் திறந்தேன். மண்ணெண்ணெய்ப் பாட்டிலை எடுத்தேன். லைட்டில் ஊற்றினேன். காகிதம், பேனா, இங்கிப் பாட்டில் யாவும் எடுத்து வைத்துக்கொண்டேன். கண்ணாடியையும் மாட்டிக்கொண்டேன். பேனா வேகமாகப் போகிறது. கண்ணாடியை எங்கே மாட்டிக்கொண்டீர் என்று கேட்டு விடாதீர்கள்–வேண்டாம் மன்னிக்கவும். ஆரம்பத்திலிருந்து இந்தக் கட்டுரையை எழுதத் துவக்கிய வரையில் நினைந்து நினைந்து எழுதி முடிக்கலானேன். இப்போது கடிகாரத்தில் 3–30.

இவ்வளவு தூரம் இந்தக் கட்டுரையை இந்த விதம் உங்களுக்குப் பிரியமாகவோ அப்பிரியமாகவோ–ருசியாகவோ அருசியாகவோ எழுதும்படியான பாக்கியத்தை உண்டாக்கின அந்த மூட்டைப் பூச்சி முத்தண்ணாக்களுக்கு எனது வந்தனம் உரியதாகுக! தூக்கம் வந்து தொந்தரவு செய்கிறது. மறுபடியும் படுத்துத் தூங்கிப் பார்க்கிறேன். நீங்களாவது எனக்கு விடைகொடுங்கள். உங்கள் அனைவருக்கும் வந்தனம். வருகிறேன்.

கள்ளர் பள்ளர் யுத்தம்

—:(0):—

(பட்டியான்.)

அபிசீனியா யுத்தம். தீண்டாமை விலக்குப் போர். ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகம். இந்து முஸ்லீம் சண்டை ஆகிய வெல்லாம் இது காலை பத்திரிகைகளிலே, படித்துப் படித்துச் சலித்துப் போயிருப்பீர்கள்.

ஆனால் இவ் விரு வகுப்பிடையே, நேரிட்டிருக்கும் போர். வேல்களின் மின்னல். கழிகள் ஒன்றோடொன்று தாக்கும் சப்தம். கோப விப்ரதாப மொழிகள். பெண்களின் பயங்கரக் கூச்சல். போலீசின் விஜயக் காட்சி. அதிகாரத் தெய்வங்களுக்குச் சமர்ப்பிக்கும் காணிக்கை கப்பம். மனிதரை மனிதர் வருத்தும் மனப்பான்மை ஈறாக, காலச் சக்கரத்தின் சுழற்சி யறியாத மாக்கள் மகானின் சாத்வீகப் போரின் தன்மையும் மேன்மையும் உணராது விளைப்பன ஆகலான், இத் தலைப் பெயருடன் விபரம் கீழே தருகிறேன். புனைந்துரையல்ல.

நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும்

பாண்டி நாட்டிற் கோர் திலகம் என விளங்கும் பெரிய குளம் தாலுகா தமிழ் நாட்டின் ஒரு பகுதி. மேற்கு மலைத் தொடரால் அரண் செய்யப்பட்டது. மேற்கே திருவாங்கூர் மலையும், தெற்கே வருஷநாட்டு மலையும், வடக்கே கோடைக்கானல் மலையும், கிழக்கே உசிலம்பட்டி மலையும் எல்லையாக உடையது.

திருவாங்கூர் மலையினின்று பெரியாறும், வருஷநாட்டு மலையினின்றும் சுருளிநதியும், வைகையும் கோடைக்கானல் மலையின் இரு மருங்குகளினும், முறையே சண்முக நதியும் வராக நதியும் இழிகின்றன. இயற்கை நலனையும் எழிலையும் அள்ளி இரைத்து முடிவில் ஒன்றாகக் கலக்கின்றன.

ஆற்றின் புறங்களிலும், மலையின் சார்வுகளிலும் சிறு சிறு பட்டிகளும், பெரிய சிறிய கிராமங்களும் உள்ளன. அவைகள் தமிழரும் ஏனைய பிறரும் கூடி அமைத்தவைகளாம்? வேளாண் செய்தற் பொருட்டு என விளங்கும்.

பட்டிகளனைத்தும் கூரை வேய்ந்த வீடுகளும் குப்பை நிறைந்த வீதிகளும் ஆவன. காரை வீடுகளும் உண்டு. சிறிய கிராமங்களும் பட்டி இனத்தைச் சேர்ந்தவையே. பெரிய கிராமங்கள் சிறிது நவீன நாகரீகத்தைச் சேர்ந்தவைகள். பட்டிக்கும் கிராமத்திற்கும் பொது நாகரீகம் கிராப் எனச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

பிரஸ்தாப வகுப்பினர் தமிழரேயாம். புஜபலம் மிகுந்தவர்கள். அஞ்சா நெஞ்சினர். சேகை என்ற முறையால் அதிகார வர்க்கம் அடக்கப்பட்டவர் ஒருவர். தீண்டாதார் என்ற முறையால் ஜனங்கள் அடக்கப்பட்டவர் ஒருவர்.

எனவே பட்டிகளில் வாசம் செய்பவர்கள். தேவரும் குடும்பரும் என்ற காரண மரபுப் பெயரும், கள்ளர் பள்ளர் என்ற காரண ஆக்கப் பெயரும் பெற்றவர்கள் ஆவர்.

சண்டையின் எழுவாய்

திருவிழா அதி விமரிசையாக நடந்து கொண்டிருக்கிறது. அன்று புதன் கிழமைத் திருவிழா. கூட்டம் மிகுதி. எள் போட்டால் கீழே விழாத நெருக்கல். "பட்டாளத்தான் சுடுகிறான்! ஓடுங்கள். ஓடுங்கள். அப்பா ஐயோ பிள்ளையைக் காணோம்! தகப்பனைக் காணோம்! மனைவியைக் காணோம்."—என இரைந்து கொண்டு ஜனங்கள் நான்கு மூலைகளிலும் சிதறி ஓடினர். கால்களில் ட்ரவுசரும் மிலிடரி சர்ட்டும் அணிந்த சில வாலிபர்கள் விரைந்து ஓடினர். ஜனங்களுடன் சேர்ந்து ஓடியவர்களில் நானும் ஒருவன்.

தாலுகாவின் மத்தியில் பெரியாற்றின் கரையிலே மாரியம்மன் கோவில் இருக்கிறது. வருடந்தோறும் சித்திரைக் கடைசியில் விழா எடுப்பர். பொங்கலுடன் செவ்வாயில் ஆரம்பித்து பொங்கலுடன் செவ்வாயில் முடியும். ஆயிரக் கண் மாரி பிணி தீர்க்கும். கேட்ட வரம் நல்கும்; ஆகையால் நேர்ச்சிக் கடன் செலுத்த ஆடு கோழிப் பொங்கலுடன், கண் மலர், கன்னடக்கம், அக்கிச்சட்டி, சலாகை குத்தல், வாகனம், மாவிளக்கு, அபிஷேகம் முதலிய நேர்ச்சிக் கடன் செலுத்துவர். நமது நாட்டின் எல்லாக் கோவில்களைப் போலவே தீண்டா வகுப்பினர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

பள்ளர் வகுப்பினர் ஒன்று கூடினர். பல ஊர்களிலும் கூட்டம் நடத்தினர். 'சமத்துவமும் சகோதரத்துவமும் வேண்டும், எதுவரினும் அஞ்சாது எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்' என தீர்மானித்தனர். தலைக்கட்டு வரி விதித்தனர். பணம் திரட்டினர். ஆற்றின் இக்கரைக்கு ஒரு தலைவனும் அக்கரைக்கு ஒரு தலைவனும் ஏற்பட்டனர். கோவிலுக்குள் சென்று, அபிஷேகம் ஆராதனை செய்வது' என சில வாலிபர்களுக்கு ஸ்கவுட் உடைகளை அணிவித்தனர்; அபிஷேகத்துடன் சென்றனர். விபரம் தெரிந்த தர்ம கர்த்தர்கள் போலீசாருக்கு அறிக்கையிட, புக விடாது விரட்டி அடித்தனர். கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்குக் காரணம் இவை என பிறகு விளங்கிற்று.

தோல்வியுற்ற கூட்டத்தினர் சிதறி ஓடியவர்களை ஒருங்கு திரட்டி ஊருக்குத் திரும்பிச் சென்றனர். நான்கு ஐந்து வண்டிகளில் மூங்கில் தடிகளும் காங்கிள் தடிகளும் ஏற்றி நடுவே செல்ல, கூட்டம் அவ் வண்டிகளை வளைத்துச் சென்றது. ஒரு பர்லாங்கு தூரம் சென்றவுடன் போலீஸ் கூட்டம் வளைத்துக் கொண்டது. தடிகளை யெல்லாம் பறி முதல் செய்து கொண்டு, 'குடியானவர்களையும் போலீசாரையும் அடிக்கவா?' என்ற கேள்வி எழுந்தது. 'எங்கள் மெய் காப்பிற்கு. சல்லியில் தேவமார் அடித்தார்களே, அப்போ எந்த போலீஸ் எங்களுக்கு உதவியது' என மொழிந்து விட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றனர். இவை யெல்லாம் சென்ற வருட நிகழ்ச்சி

கள். ஆற்றின் மேல் புறம் அக்கரையும், கீழ்ப்புறம் இக்கரையும்.

இக்கரைச் சண்டைகள்

சித்திரையில் சீர் கூட்டும் என்பது பட்டி வழக்கு. இரு கரையாரும் கூடி இவ் வருடம் விசேஷ தீர்மானங்கள் செய்தன ரென எதிர் கட்சியார் விளம்புகின்றனர். குடியானவர்களிடத்தில் தண்ணீர் சாப்பிடுவதானால் கையேந்தி வாங்கிச் சாப்பிடல் கூடாது. விசேஷ காலங்களில் கொட்டு அடிக்கப் போவது கூடாது என்பன அவைகளிற் சில.

அறுவடைச் சண்டை

கோடை வயல் அறுவடை. பள்ளர் பெண் ஒருத்தியை, கள்ளர் ஆடவன் கேலி செய்தானாம். தாள முடியாத கேலிப் பேச்சாம். பெண் தன் இன ஆடவர்களிடத்தில் அறைந்தனளாம். இது காலையில் சேர்ந்தது. பொழுது அமரும் வரை பொறுமையோடு வேலை செய்தனர். அமர்ந்ததும் பெண்கள் திரண்டு இல்லம் ஏகினர். கழயி னின்றும் ஊர் செல்லுகிறவர்கள் கணவாயின் வழியே தான் செல்ல வேண்டும். ஆடவரும் பெண்டிருமாக கூலி நெல் பெற்றுக் கொண்டு கள்ளர் மக்கள் கணவாயில் சென்று கொண்டிருந்தனர். கூட்டத்தில் கற்கள் விர் விர் என்று வந்து விழுந்தன. பலருக்குக் காயம் ஆயிற்று. திடீரென ஒரு கூட்டம் சூழ்ந்து கொண்டது. ஆடவர்களை அடித்தும், பெண்களைப் பல துர்ச் சேட்டைகள் செய்தும், இனிமேல் கலியாணமும் செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டுப் போயினர். விவகாரத்தைப் பற்றி பல பஞ்சாயத்துப் பேசினர். முடிவில் சல்லியில் கலகம் வைத்துக் கொள்வதென முடிவு கட்டினர்.

சல்லிக் கலகம்

பக்கத்து ஊரொன்றில் சல்லிக்கட்டு நடந்தது. இருதரப்பாரும் ஆட்கள் திரட்டினர். அவ்வூர் மைதானத்தில் இரு திறத்தாரும் அணி வகுத்து நின்றனர். வேல்கள் மின்னின. மீசைகள் துடித்தன. வசை மொழிகள் கிளம்பின. கை கலக்கும் நேரம். போலீசார் தோன்றினர். தேவர் கூட்டத்திலுள்ள தடிகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஸ்டேஷனுக்கு அனுப்பி விட்டனர். குடும்பர் கூட்டம் கொடுக்க மறுத்து விட்டது.

போலீசார் முன்னமே டிப்டி சூப்பிரண்டுக்கு தந்தி கொடுத்திருந்தன ராகையால், ப்ளசாரூடாய் போர்க் களத்திற்கு

வந்து சேர்ந்தார்... கள்ளர் கூட்டம் நிராயுத பாணிகளாகவும் பள்ளர் கூட்டம் ஆயுத பாணிகளாகவும் நிற்கக் கண்டார். கோபாதீதானார். பல்லை நற நற வென்று கடித்தார். கள்ளருக்கு அபயஸ்தம் கொடுத்தார். பள்ளர் ஆயுத பாணிகளின் முன்னே நின்றது. ஒழுங்குடன் கலைத்துப் போங்கள்; இல்லையெனின் உங்களுக்கு கேடு காலம் தான் என இரைந்தார்.

கூட்டம் கலைந்தது. கள்ளர் எங்கள் துரையென வாழ்த்தினர். அஞ்சலி செய்தனர். துரையின் கோபத்திற் காளானவர்கள், விசனத்துடன் ஏகினர். 'சென்றவர்கள் ஊடே உள்ள ஒரு ஊரில் நுழைந்து, குடியானத் தெருவில் தண்ணீர் கேட்டார்களாம். மொண்டு ஊற்றப்போக, பாத்திரத்தைப் பிடுங்கி தாங்களே குடித்துவிட்டுச் சென்றார்களாம். ஏழு கல அரிசியும் ஏழு பன்றிக் குட்டியும் சமைத்து கலகத்திற்கு வந்த பள்ளர் கூட்டத்திற்கு ஒரு சுற்றுக்கு காணவில்லையாம். எங்களுக்கு எவ்வித; செலவும் இல்லை.' இப்படி என்னிடத்தில் கள்ளர்களில் ஒருவன் சொன்னான்.

வேல் விளைத்த பூசல்

சித்திரைக் கடைசி. விழா நடக்கிறது. புதன்கிழமை விழா. பகலவனும் வானமும் காய்வதற் கஞ்சியதாலும், பள்ளர்கள் கோவிலை பகிஷ்கரித்து, தங்கள் ஊர்களில் இதே நாளில் விழா செய்ததாலும், கூட்டம் மிகமிகக் குறைவு. கோவில் வருமானமும் பாதிக்கு மேல் குறைவே.

இக்கரைத் தலைவன் வசிக்கும் ஊர் சிறுபட்டி பத்திரிகை படிக்கும் வழக்கம். தபாலில் வந்த பத்திரிகையை கொடுக்கச் சென்ற தபால்காரன், கையில் கொடுக்காமல் கீழே வைத்தான் என அடிக்க, வேறொருவருக்கு வந்த மணியார்டரை பிடுங்கிக் கொண்டான் என்ற கேஸ் கோவிலில் வாயிதா போடப்பட்டிருந்தது.

இதல் மிகவே தற்காப்பிற்காக இருநூறு மனிதரும், ஐந்து வண்டிகளில், வடிவேல், அரிவாள் முதலிய ஆயுதங்களுடன் வாயிதாவிற்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

கோவிலுக்கு கிழக்கே அண்மையில் நூறு வீடுகளுள்ள ஒரு பட்டி. இப்பக்கத்திலுள்ளவர்கள், மேற்கே செல்லவேண்டுமானால் இவ்வூரின் வழியாகத்தான் செல்லவேண்டும். வேறு வழி இல்லை. கள்ளரின் வீடு சுமார் முப்பது இருக்கும்.

கிழக்கே நம் மாள்களுடன் கலகம் செய்தார்கள். அவர்கள் இப்பக்கம் வந்தால் அடிக்கவேண்டும் என சில வாலிபர்கள் துள்ளிக் கொண்டிருந்தனர். வயலிற்கு போடும் உரத்தை விற்க வந்த ஒரு பள்ளியிடத்திலுள்ள நெல்லையும் பறித்துக் கொண்டு அவமானமும் செய்து விட்டிருந்தனர்.



வண்டியும் மனிதரும் ஊரைக் கடந்து ஒரு பர்லாங்கு தூரம் சென்றுவிட்டனர். மூன்று யுவர்கள் வேலேந்திய கையினராய் வந்தனர்.

"ஏய் வேலைப் பூட்டியபடியே வருகிறீங்களே? எந்த ஊர்?" என்றனர் கள்ளர்களில் சிலர். "நீங்கள் என்ன கேக்கிறது. உசிப்பி தள்ளிப்போகும்" என்றனர் வந்தவர்கள். "பாருடா வேலைப் பூட்டியபடியே வீதியில் வந்தது மில்லாமே நீ யென்ன? நானென்ன? என்கிறதை."

வாய்ச் சண்டை ஆரம்பமாயிற்று. மூவரில் ஒருவன் கையைத் தட்டினான். இருவர் விரைந்தோடினர். பலர் ஒருவனை கம்பும் கழியுடன் வளைத்துக் கொண்டனர். அவன் கையிலுள்ள வேலை ஒருவன் வெடுக்கென இழுத்துக்கொண்டு குத்தப் போனான். "குத்துடா, வேலைவிட்டுப் போட்டுப்போனால் உனக்குப் பெண்டாட்டி" என்றான் நின்றவன்.

"பட்டாளம் வருதுடா" என்ற கூச்சல் கள்ளர் தெருவில் எழுந்தது. பெண்கள் ஓவெனக் கதறினர். கற்கள் விர் விர் என வெடிகுண்டுகளைப் போன்று ஒன்று பத்து நூறு என்று விழுந்தது. "சேவகரைக் கூப்பிடப் போங்கடா" என்றார் சிலர். உயிர் தப்பினால் போதும் என்று ஓடினார் பலர். எஞ்சியவர்களை வீட்டினுள் போட்டு மூடி, தலை வாசலில் பெண்கள் நின்று கொண்டனர். குடியானவர்களில் சிலர் வீடுகளின் மேலேறி ஒழுங்காகப் போங்கடா எனக் கத்தினர். கல்லை எறிந்துகொண்டே வந்தவர்கள் வீடுகளில் நுழைந்து, ஆண் பெண் பலரை வெட்டியும் குத்தியும் படுகாயப் படுத்தி விட்டுச் சென்றனர். வேலைப் பிடுங்கியவன் விரைந்தோடி, 'கள்ளர்கள் ஊரைக் கொள்ளை யடிக்கிறார்கள். ஐந்தாறு பேரை குத்திவிட்டார்கள். இதற்கு முன்னால் எத்தனை கொலை விழுந்திருக்குமோ!' என சத்த மிட்டுக்கொண்டே ஓடி போலீசில் அறிவித்தான்.

விழா பார்க்க வந்த ஜனங்களும், போலீசும், ரிசர்வும் சப் இன்ஸ்பெக்டரும், ஸுப்பிரண்டும் ஆக ஏராளமானவர்கள் ஊரில் வந்து கூடினர். போலீஸ் கூட்டம பிளசரிலும், லாரியிலும், வந்தனரென தெரிவித்துக் கொள்கிறேன்.

துரை வந்துவிட்டாரென பெண்கள் ஆனந்தக் கூச்சலிட்டனர். சங்கதியை விசாரித்துக்கொண்டு, ஒருவருக்குத்தான் பலத்த காயம் ஏற்பட்டிருந்தமையின், அந்த ஆளை மாட்டு வண்டியிலும், மற்ற காயப்பட்டவர்களை காரிலும் எறிந்த கற்களையும் உடைத்த சட்டி பானைகளையும் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

நிகழ்ந்தவை யனைத்தும் பார்த்துவிட்டுச் சென்ற மற்ற ஊர் கள்ளர் கூட்டம் கோவிலில் திரண்டனர். பள்ளர்கள் எல்லாம் சண்டைக்கு வாங்கடா என கூவிக்கொண்டே கும்பலில் தேடினர். அத்தனை கூட்டத்திலும், தூர ஊர்ப் பள்ளர்கள் இரண்டு பேர் அகப்பட்டனர். ஒருவனை அடித்து நொறுக்கினர். ஒருவன் ஓடிவிட்டான். பள்ளன் என்று கள்ளன் ஒருவனையும் அடித்துவிட்டனர்.

மறுநாட் காலையில் ஊரில் பெரிய அமளி ஏற்பட்டது. எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளின் மேலேறி "இதோ வருகிறார்கள். அதோ வருகிறார்கள். அந்தா பெரிய கூட்டம்" எனவும் கள்ளரெல்லாம், போலீசுக்குப் போவோரும், தடிகள் சேகரிப்போரும், கற்களை வாரிக் குவிப்போரும், கவண் கட்டுவோரும், 'நேற்று கரிகொண்டு போய்விட்டான், இன்று வாட்டும்' என்போருமாக அமர்க்களம் செய்து கொண்டிருந்தனர். போலீசும் பாராவிற்கு வந்து சேர்ந்தது. பொழுது போம்வரை கூட்டமும் ஈட்டமும் வாவில்லை. போலீசார் 'எதிரிகள் வந்தால் வாருங்கள்' என சொல்லிச் சென்றனர்.

ஏன் ஐயா பயக்கின்றீர்களே, வீண் வம்பை ஏன் இழுக்கவேண்டும் என்றேன். 'வேலைப் பூட்டிக்கொண்டு வந்ததும் இல்லாமே, எங்க பொம்பளை கிட்ட எல்லாம், மாரியம்மாளுக்கு தேங்கா பழம் வச்சோம் திண்ணலே, பொங்க வச்சோம் திண்ணலே, கால் ரூவா காணிக்கை வச்சோம் எடுத்துக் கிரிச்சி, சாமியோ சாமி எண்ணு சொன்னாங்களே பள்ளப் பயக; கல்லை எரிஞ்சிகிட்டு வந்தாங்க. இல்லாட்டி ஒரு கை பாத்திருப்போம். துரை பொறுங்க கலகம் வேணாம் என்று சொல்றாரு. அதுக்கில்லே பாக்குறோம். இதுக்கு முன்னே பள்ளரை கருவருத்துப் போட்டிருப்போமே. அவக சும்மாவா இருக்கிறாங்க, இண்ணைக்கி இங்கேவரப் பொறப்பட்டவக, கருவாட்டு நாக்கப் பட்டியிலே ஆளெல்லாம் கோயிலுக்குப் போயிருப்பாங் கண்ணு போயி, தோட்டத்திலே இருந்த

கெழவனை தூக்கிக்கொண்டு போயி, ஆத்து மேட்டிலே, வச்சிக் கிட்டாங்க. அதைத் தெரிஞ்சி காடு கரைக்கி போயிருந்தவகளெல்லாம் ஒண்ணு சேந்தாங்க. கோயிலுக்கு போயிருந்தவக எல்லாத்தையும், ஆளைவிட்டு ஒண்ணு சேத்தாங்க. இவக இந்த மேட்டிலே, தொண்டு நிண்ணுங்க, அதுக்கு முன்னே போலிசே கூப்பிடப் போன ஆளும் கூப்பிட்டு கிட்டு வந்திட்டாங்க; கலகம் நிண்ணு போச்சி. அதினாலேதான் இங்கே வரலே. எங்களுக்கு கேசுக்கு ரூவா இல்லே; சர்க்கார் வாதியா எடுத்துக் கிட்டாங்க' என்று சொன்னார்கள்.

இவ்வூர் கொள்ளைக் கேசில் பலரை கைது செய்தமையின், வேறு கலகங்கள் நிகழவில்லை. இனி பெரிய கலகம் நேருமென்றும் நூற்றுக் கணக்கில் ஜனச்சேதம் ஆகுமென்றும் கள்ளர் வகுப்பினர் அறைகின்றனர்.

அக்கரைச் சண்டைகள்
குடியால் விளைந்தது

குடித்துவிட்டு ரோட்டின் வழியே வந்து கொண்டிருந்த, இரண்டு மூன்று பள்ளர்கள், புருடனும் மனைவியுமாக வந்து கொண்டிருந்த கள்ளர்களில் ஒருவனை யைப் புடைத்தனர். அவன் தன் இனத்தாரிடத்தில் சொன்னான். "ஊரைக் கொள்ளையடித்து விடவேண்டும். பள்ளன் அக்கிரமம்" எனத் திரண்டு சென்றனர். இரு வகுப்பினரால் பஞ்சாயத்து செய்யப்பட்டு, காயச் சிலவும் அபராதமும் வாங்கப்பட்டது.

பொங்கல் சமர்

கோவிலுக்கு மேற்கே அக்கரைக்கு அண்மையில், உப்புக்கோட்டை என்ற சிறிய கிராமம் இருக்கிறது. இவ்வூர் பள்ளர்கள் குலதெய்வத்திற்கு, குடியானத் தெருவழியே சென்று பொங்கலிடுவதென தீர்மானித்தனர். குடியானவர்கள் பெரும்பகுதியினராகையால், பெருங்கலகம் நேருமென்றும், வருடந்தோறும் செல்லும் வழியை தடுக்கின்றனரெனவும் மேலாவுக்கு அறிவித்து உதவி கோரினர். ரிசர்வ் போலீசுடன டிப்டி சூப்பிரண்டு வந்து வீதியை பார்வையிட்டு, வருடந்தோறும் செல்லும் பாதை இதுவாயின், சிவிலுக்கு செல்ல வேண்டுமெனவும், பொங்கல் உங்களுடைய வீதியைச் சுற்றியே . செல்ல வேண்டுமென்வும் உத்தரவிட்டு மாரியம்மன் கோவில விழாவை முன்னிட்டு கேம்ப் போட்டிருந்தார்.

குடியானவர்கள் சித்திரா பௌர்ணமிக்கு வரதராஜப்பெருமாள் உற்சவம் நடத்துவது வழக்கம். பெருமாள் எங்கள் வீதி வழி வருமாயின் விடமாட்டோம் என அக் கரையாரெல்லாம் திரண்டனர். பெருங்கூட்டம். விபரீதம் நேரிடும் போலிருந்தது. ரிசர்வுடன் சூப்பிரண்ட் சென்று, கூட்டத்தைக் கலைத்தார்.

அழைப்பிற்கு வந்த தலைவனையும், இனத்தாரையும் வழி அனுப்பச் சென்ற பத்துப்பேருடன் பேசிக்கொண்டே சென்றனராம். இரவிற் கோழி கூப்பிடும் நேரமாம். பக்கத்திலுள்ள ஊரில் கள்ளர் தெருவுக்கு சமீபமாகப் போனதும், இப்போ வந்தால் அல்லவோ நன்றாக இருக்கும் என மொழிந்தனராம். அவ்வீட்டுக்காரன் பக்கத்திலுள்ள ஊர்களுக்கெல்லாம் தகவல் கொடுக்க, ஏராளமானவர்கள் திரண்டு முன்னால் சென்றவர்களை தேடிக்கொண்டு சென்றனராம். வழி அனுப்பி விட்டுத் திரும்பியவர்கள் எதிர்ப்பட வளைத்து அடித்தனராம், சோளத் தோட்டங்களில் ஒளித்து கொள்ள, ஐவர் பலத்த அடிபட்டனராம். போலீசாருக்கு அறிவிக்க, போலீசார் தூக்கிக்கொண்டு வந்து மரண வாக்கு மூலம் வாங்கினர். இதில் ஒருவனுக்கு சுமார் இருபது வேல் குத்துகள் என டாக்டர் அறிவிக்கிறார். சிகித்சைசாலையில் இருவர் மரித்தனர்.

முடிவுரை

இந் நிகழ்ச்சிகளை எங்கள் தாலுகாவில் பேசாத ஊர் இல்லை எனலாம். இனியும் பெரிய கலகங்களும், கொள்ளைகளும், சிறு சச்சரவுகளும் நடந்திருக்கின்றன. அவைகள் நன்கு புலன் ஆகாமை பற்றி ஈண்டு இடம் பெற்றில.



“குஸுமாவின் குயுக்தி”

(டி. சீனிவாஸன்.)

குஸுமாவும் ராஜுவும் ஒரே கலாசாலையில் படித்தவர்கள். ஆனால் ராஜு மாத்திரம் இரண்டு வகுப்புகள் மேலே படித்துக்கொண்டிருந்தான். ராஜு பி. ஏ. பாஸானவுடனே வேலைக்காகச் சென்னையைவிட்டுத் தன் ஊராகிய பெங்களூருக்குச் சென்று விட்டான். குஸுமாவும் இண்டர்மீடியட் வரையில் படித்துவிட்டு நின்று விட்டாள். அவள் இருப்பது சென்னை. குஸுமாவின் தகப்பனாராகிய மாணிக்க முதலியார் மிகுந்த தனவந்தர். குஸுமா அவருடைய ஒரே பெண். பூந்தமல்லியில் “சுந்தர விலாஸம்” என்னும் அழகிய மாளிகையில் தற்கால நாகரிகங்களுடன் வெகு சுகமாய்க் காலங் கழித்து வந்தார். ராஜு கலாசாலையில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அவருடைய காரில் குஸுமாவுடன் அவர் வீட்டிற்கு அடிக்கடி வந்திருக்கிறான். ஆகையால் அவனுக்கு குஸுமாவின் தாய், தகப்பன்மாரை நன்றாகத் தெரியும். மாணிக்க முதலியாருக்குத் தன் ஒரே பெண்ணான குஸுமாவை நற்குணமுடைய ஓர் பையனுக்கு விவாகம் செய்து வைக்க நினைத்தார். எளியவனாயிருந்தாலும் நற்குணமுள்ளவனாக இருக்கவேண்டுமென்பதே அவருடைய நோக்கம்.

ராஜுவுக்குத் தன் வாழ்நாளைக் கஷ்டமின்றி கழிக்கப் போதிய ஊதியமிருந்தது. ஆயினும் அவன் மிகவும் படிப்பாளி; மேலும் உழைப்பாளி ; நற்குண நற்செய்கைகள் பொருந்தியவன். கலாசாலையில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது குஸுமா இவனுடைய நற்குண நற்செய்கைகளை அறிந்தவளாதலின் தனக்கு பாடங்கள் ஏதாவது தெரியாவிட்டால் இவனைக் கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். இவ்வாறாக இவர்கள் சினேக பாவத்துடனேயே இரண்டு வருஷங்களாக இருந்தார்கள். ராஜுவோ, மின்னலைப் பழிக்கும் குஸுமாவோடு சிநேக பாவத்துடனேயே இருந்தபோதிலும் அவளே தனக்கு மனைவியாக மாட்டாளா என்று எண்ணியதுண்டு. ஆயினும் அவளுடைய

அந்தஸ்தைக் காணும்பொழுது, இவ்வளவு திரண்ட ஆஸ்திக்குரியவள் நமக்கு எப்படி மனைவியாகப் போகிறாள் என்று ஏங்கியதும் உண்டு.

இப்படியிருக்க ஒருநாள் ராஜுவுக்கு சென்னையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் கீழ் கண்டவாறு எழுதி யிருந்தது.

சென்னை.
2-3-36

அன்புள்ள ராஜுவுக்கு,

உன் சினேகிதையாகியாகிய குஸுமாவுக்கு போனமாதம் கல்யாணம் நடந்தது. அதைப்பற்றி மன்னிக்கவும். இன்னும் ஒரு வாரத்தில் குஸுமா தன் புருஷன் வீட்டிற்குச் செல்லவேண்டும். அவள் அவ்வாறு போவதற்கு முன் உன்னைப் பார்க்க ஆவலா யிருக்கிறாள். சீக்கிரம் வந்து சேரவும். ரயில் சார்ஜுக்காக ரூபாய் 50 அனுப்பி யிருக்கிறேன்.

இப்படிக்கு
மாணிக்க முதலியார்.

இதைப் படித்தவுடனே ராஜுவுக்கு தூக்கி வாரிப்போட்டது. தான் என்னதான் அந்தஸ்தில் குறைந்தவனா யிருந்த போதிலும் தனக்கு சினேகிதையாக இருந்ததற்காகவாவது திருமணப் பத்திரிகை அனுப்பாததைப் பற்றி மிகுந்த துயரமும் கோபமும் கொண்டான். ஆயினும் கடைசி முறையாக தன் அன்பிற் குரியாளைப் பார்க்க ஆவல்கொண்டு அன்றிரவே புறப்பட்டு மறுநாள் காலையில் சென்னையை யடைந்தான். குஸுமாவோ, ஸ்டேஷனுக்கு தானே காரை ஓட்டிக்கொண்டு வந்திருந்தாள். ராஜு வந்தவுடன் இருவருமாக உட்கார்ந்து கொண்டு மாணிக்க முதலியா ரில்லத்தை யடைந்தனர். குஸுமாவின் தாயார் இவனது யோக க்ஷேமங்களை விசாரித்துவிட்டு இவர்களுக்கு காபி, இட்லி முதலியவைகளை கொடுத்து சாப்பிடச் சொன்னாள். இருவரும் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டார்கள். பிறகு இவனைக் காரில் ஏற்றிக்கொண்டு குஸுமா, கடற் கரைப்பக்கம் சென்றாள். அப்பொழுது ராஜு குஸுமாவைப் பார்த்து, "என்ன உன் கல்யாணத்தைப்பற்றி எனக்கு ஒன்றுமே சொல்லவில்லை" என்றான்.

"அதை ஏன் கேட்கிறாய்? அதை நினைத்தாலே எனக்கு அருவருப்பாய் இருக்கிறது" என்றாள் குஸுமா.

ராஜு:—"ஏன் உனக்கு உன் புருஷனைக் கண்டால் பிடிக்கவில்லையோ"!

குஸுமா:—"ஆமாம். நான் படித்தவளா யிருக்கிறேன். மேலும் எனக்கு கார் ட்ரைவ் பண்ணத் தெரியும். இதெல்லாம் அவருக்குப் பிடிக்கவில்லை. மேலும் அவர் பணக்காரரே யொழிய, படிப்பு பூஜ்யம்; பணத்திற்காக என்னைப் படுகுழியில் தள்ளி விட்டார்கள்" என்று சொல்லி அழத் தொடங்கினாள்.

ராஜு:—"என்ன! எல்லாம் தெரிந்த உன் தகப்பனா இப்படிச் செய்தார்? சே! எல்லாரும் பணம் என்றால் பிணம் தான் போலிருக்கு" என்று சொல்லிவிட்டு அவ் விஷயத்தைப்பற்றி மேலும் கேட்காமல் பேச்சை நிறுத்தி விட்டான். பிறகு இருவரும் வீட்டிற்குத் திரும்பினார்கள்.

இவ்வாறாக இரண்டுநாட்கள் கழிந்தன. மூன்றாம்நாள் சாயந்திரம் இருவருமாகப் பீச்சுக்குச் சென்றார்கள். அப்பொழுது குஸுமா, "என்ன ராஜு, நீ எப்பொழுது கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாய்? என்று கேட்டாள்.

ராஜு பெருமூச் செறிந்து "நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை" என்றான்.

"ஏன்? மனதிற் குகந்த மனையாட்டி அகப்பட்டால் அப்பொழுது?" என்று புன் முறுவலுடன் கேட்டாள்.

"அப்படியும் நேரிடப் போவதாக எனக்குத் தெரியவில்லை. நான் முன்பு காதலித்த பெண்ணிற்குக் கலியாணமாகி விட்டது. வேறு யாரையும் கண்ணெடுத்

தும் பார்க்கமாட்டேன்" என்று விசனத்துடன் சொன்னான் ராஜு.

"வேறு ஒருத்தி என்போல் இருந்தால் அப்பொழுது கூடவா" என்று கேட்டாள் குஸுமா.

"அப்படி ஒருகாலும் எனக்குக் கிடைக்கமாட்டாள்" என்றான்" ராஜு.

"கிடைத்தால்?"

"மணம் புரிவேன்."

"இல்லா விட்டால்."

"கலியாணமின்றிக் காலங் கழிப்பேன்."

இவ்வாறு இவனுடன் பேசி இவனுடைய மனோபிப்பிராயத்தை தன் தகப்பனாரிடம் தெரிவித்தாள் குஸுமா. அன்றிரவு ராஜு தான் மறுநாள் ஊருக்குப் போக வேண்டும் என்று சொல்லி, குஸுமாவை அவளுடைய போட்டோ ஒன்றைக் கேட்டான். குஸுமாவும் தன்னுடைய போட்டோ ஒன்றை எடுத்துக்கொண்டு அவனைக் கட்டி யணைத்து முத்தமிட்டாள். ஆனால் இது ராஜுவுக்குப் பிடிக்கவில்லை. குஸுமாவிற்கு தன் புருஷனிடத்தில் அன்பில்லாம லிருந்தாலும் இவ்வாறு செய்வது தகாது என்று எண்ணி, "குஸுமா" என்று கூப்பிட்டான். குஸுமாவும் உடனே வந்து அழைத்த காரணத்தைக் கேட்டாள்.

ராஜு.—"நீ இப்படிச் செய்வது உனக்கே யழகல்ல; கலியாண மானபின்பு வேறு ஒருவனை......."

குஸுமா:—"அதனால் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நான் கலியாணமாகாததற்கு முன் இப்படிச் செய்தால் அது அழகா?" என்று கேட்டாள்.

இக் கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் ராஜு தயங்கிக் கொண்டிருக்கும் பொழுது குஸுமா போய்விட்டாள்.

மறுநாள் மாணிக்க முதலியார் ராஜுவைக் கூப்பிட்டு "நேற்றிரவு நடந்ததைப் பற்றி நீ ஒன்றும் எண்ண வேண்டாம். நான் உன்னை ஒரு காரியம் செய்யச் சொல்லுகிறேன். நீ அதைச் செய்வாயா' என்று கேட்டார்.

"ஆகா! தடையின்றி எது வேண்டுமானாலும் செய்கிறேன்" என்று சொன்னான் ராஜு.

"நிஜமாகவா?"

"ஆம். கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டாம்" என்றான் ராஜு.

"அப்படியானால் நீ........என் பெண்ணாகிய குஸுமாவைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்" என்றான்.

ராஜுவுக்கு இது கனவோ, நினைவோ என்று ஒன்றும் தெரியவில்லை. மறுவாரம் ராஜுவுக்கும் குஸுமாவுக்கும் திருமணம் நடந்தேறியது. கலியாணத்திற்கு முன் நடந்தவை யெல்லாம் குஸுமாவின் சூழ்ச்சி யென்றும், எல்லாம் தன்னைப் பரீட்சிப்பதற்காகவே செய்யப்பட்டது என்றும் அறிந்தான்.

வஸந்த-குமார்

—:o:—

(கா. சண்முகம்.)

மதுரையில் ரத்தினசாமி முதலியார் என்றொருவர் வசித்து வந்தார். அவர் பரமஏழை. பிழைப்பதற்காக ஒரு சிறிய மளிகைக்கடையை வைத்து, அதில் வரும் வருவாயைக் கொண்டு பிழைத்து வந்தார். அவருக்கு குமார் என்ற மகனைத் தவிர வேறு பிள்ளை கிடையாது. குழந்தை பிறந்த ஒரு வருடத்தில் தாய் கொடிய வைசூரியால் பீடிக்கப்பட்டு உயிர் நீத்தாள். முதலியார் பிள்ளையைச் சிறப்புடன் வளர்த்து வந்தார். தக்க வயதில் குமாரைப் பள்ளியில் சேர்த்தார். குமார் எல்லோரிடத்திலும் மரியாதையாக நடந்து வந்தான்.

குமார் 19-ம் வயதில் எஸ். எஸ். எல். ஸி (S. S. L. C.) பாஸ் செய்தான். மேற்கொண்டு படிக்க வேண்டுமென்ற அவாவினால் தந்தையின் உத்திரவைக் கேட்க, அவரும் சம்மதித்து கடன் வாங்கி குமாரைச் சென்னையிலுள்ள 'பச்சையப்பன்' கல்லூரில் சேர்த்தார்.

இரண்டு மூன்று ஆண்டுகளில் குமார் பி. ஏ. வகுப்பில் முதன்மையாகத் தேறி பட்டம் பெற்று தன்நாடு வந்து சேர்ந்தான். முதலியார் தன் மகனுக்கு விவாகம் செய்ய வேண்டுமென்று, அவ்வூரில் பிரபல தனவந்தராகிய சபாபதி முதலியாரின் மகள் வஸந்தாவை நிச்சயம் செய்தார்.

வஸந்தா படித்தவள். வயது பதினான்கைக் கடந்து பதினைந்தை நெருங்கியிருக்கலாம். சிறிது உயரமும், ஒல்லியுமான உருவமும், பொன்னிறமான மேனியும், உடையவளாயிருந்தாள். அவளது கருங்கூந்தல் அலையலையாய் வளைந்து வளைந்து, பொற்கம்பத்திற் கட்டிய கரும் பட்டுக்கொடிபோல முடியவிழ்ந்து இடையைக் கடந்து தொங்கியது. அவளது உருண்ட முகத்தில் அழகெல்லாம் திரண்டு குடிகொண்டதென்னலாம். அவளை உற்று நோக்குகின்றவர் ரதியோ என்று ஐயுறுமாறு விளங்கினாள்.

*　　*　　*

நல்ல சுபத்தினத்தில் குமாருக்கும், வஸந்தாவுக்கும் விவாகம் நடந்தது. இருவரும் நகமும் சதையும் போன்று ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார்கள். இவ்விதமிருக்கும் நாளில் சில கொள்ளைக்காரர்கள் முதலியாரின் கடையிற் புகுந்து சமான்களைத் திருடிச் சென்றார்கள். முதலியார் கையில் பணமின்றிக் குடும்பத்தைக் காப்பாற்ற வழியின்றித் தவித்தார். கடன்காரர்கள் உபத்திரவம் தாங்க மாட்டாமல் தன் வீட்டிலுள்ள கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். குமார் தந்தையின் பிரிவுக்கு வந்திருந்தினான். பயன் என்ன ?

சில மாதங்கள் ஓடி மறைந்தன. கையில் பொருளில்லை. மனைவியிற் மேலிருந்த நகைகளை எல்லாம் விற்று பிழைத்து வந்தான். உத்தியோகத்திற்குப் பாடுபட்டான். இக்காலத்தில் வேலை கொடுப்

பவர் யார்? கம்பெனிகளுக்கெல்லாம் மனு எழுதிப் போட்டான். ஒரு இடத்தி லிருந்தாவது பதில் வரவில்லை. பிழைக்க வழியின்றித் தவித்தான். கடைசியில் கொல்லத்து வேலையில் சிற்றாளாக தின சரி நான்கு அணுவுக்கு அமர்ந்து வேலை செய்தான். முன் பின் பழக்க மில்லாத வனுகையால் வேலை செய்யத் தெரிய வில்லை. வேலையின் தலைமையாள் கொடுக் கும் அடியையும், வசை மொழியையும் சகித்து வேலை செய்து வந்தான். இவ் வளவு கஷ்டப்பட்டும் தினசரிக் கூலி கிடைக்கவில்லை. ஐந்தாறு தினங்களாக அவன் மனைவியும், அவனும் பட்டினி யால் வாடினர்கள். பசிப் பிணி என்பவற் றுள் சிக்கிப் புழுவைப் போன்று நெளிந்து, கண்ணீர் வடித்துக் கதறி, மனம் துடித் தார்கள். எண்ணுததெல்லாம் எண்ணி ஏங்கினுன்.

"கண்ணே வஸந்தா! நான் வேலைக் குப் போகும் பொழுதெல்லாம், அன்றே மலர்ந்த புஷ்டம் போன்ற உன் முகத்தை எனக்குக் காட்டி, வீணையைப் பழிக்கும் குரலில் 'சீக்கிரம் திரும்பிவாரும்' என்று எனக்குக் கொடுத்த விடையை நினைத்தா லும் இப்பொழுது என் நெஞ்சம் அன லில் இட்ட மெழுகைப் போன்று உருகு கிறது. கண்ணே! நான் படித்தேன். பி. ஏ. என்ற பட்டத்தையும் பெற்றேன். பெற்றும் பயன் என்ன? இப்பொழுது வேலையின்றித் தவிக்கின்றேனே! அது தான் நான் கண்ட சுகம். ஆனுல், ஒரு சுகமும் அறியாத நீ என்னை மணந்து என் னுடன் கூடிக் கஷ்டம் அனுபவிக்கின் ருயே அதுதான் நீ கண்ட சுகம். காதலி! நாம் அடுத்த பிறவியிலாகிலும் சுகம் அனு அனுபவிக்கக் கடவுளை வணங்குவாய்."

* * *

ஒரு மனிதன் தன் நாற்காலியில் உட் கார்ந்திருந்தான். அவனே நம் குமார். அவ் வறையில் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அவன் தலைக்கு மேலே உத்திரத்தி லிருந்து ஒரு கயிறு தொங்கி யது. அந்தக் கயிற்றின் முனையில் ஒரு சுருக்கு முடிபோடப் பெற்றிருந்தது.

தன் தலைக்குமேல் தொங்கும் கயிற் றைக் கண்டு உடல் நடுங்கி நாற்காலியில் உட்கார்ந்தான்.

அவனது இடது கையை மடக்கிக் கன்னத்தில் வைத்துத் தலையைத் தாங்கிக் கொண்டிருந்தான். ஒளி யி ழ ந் த கண்களி லொன்றிலிருந்து ஒருதுளி நீர் கன்னத்தின் மீது சொட்டியது. அவ னது முகம் வாடி யிருந்தது.

* * *

கரிய இரவு! அளவு மீறிய மனோ வேதனையால் அனேக மானுடர் தம் ஆயுளை முடிக்கக் குறிக்கும் கரிய இரவு? எங்கும் அமைதி நிறைந்த இரவு! நினைக்கி னும் நெஞ்சம் நடுங்கும் கரிய இரவு! கடி காரம் அதிபயங்கரமாக பன்னிரண்டுதரம் மணி அடித்தன!

மணி அடிக்கவும், குமார் நாற் காலியைவிட்டு தைரியத்தோடு எழுந் தான். உயரத் தொங்கும் கயிற்றை மறு முறையும் அண்ணாந்து பார்த்தான். அவன் முகத்தில் சிறிது புன்னகையும் தவழ்ந்தது. ஆயினும் அந் நகையினும் மாணக்குறியே தோன்றியது.

பொருக்கென, அவன் நாற்காலி மீதேறி தொங்கும் கயிற்றை ஒரு கையாற் பிடித்தான். ஒரு நிமிஷம் அந் நிலையி லேயே அசைவற்று நின்றான். உயிர் விடப் பின்வாங்கி யன்று. இறைவனுல் தனக் களிக்கப்பட்ட உயிரைத்தானே இறுதி செய்துகொள்ள முயலும் ஒவ் வொருவனும் இவ்வுலக வாழ்வை ஒழிப் பதற்கு முன் சற்றுத் தயங்கும் ஒரு நிமி ஷமே அது!

அவன் அந்த அறையைச் சுற்றிலும் பார்த்தான். அவனுக்கு உற்ற நண்ப ரில்லை, பெற்ற பிதா, மாதாக்கள் இல்லை, உதவி செய்யக்கூடிய உற்றார் ஒருவரு மில்லை. ஆனுல் அவன் மணந்து சுகம் அனுபவித்த மனைவி வஸந்தா பட்டினி யிருந்த களைப்பால் நித்திரையில் ஆழ்ந்

திருந்தாள். பார்த்தான்; பிரிய மனமின்றிக் கதறிக் கண்ணீர் வடித்தான். எப்பற்றால் உயிர் வாழ்வது? என்று ஏங்கினான்.

அவன் திடீரென்று அக் கயிற்றின் சுருக்கைத் தலையில் நுழைத்துக் கழுத்தில் இறுக்கிக் கொண்டான். தான் நின்ற நாற்காலியைக் காலா லுதைத்துத் தூரத்தே தள்ளிவிட்டு அந்தரத்தில் ஊசலாடினான். அப்பால் ஒன்றும் அசைவில்லை.

* * *

பொழுது விடிந்தது, காக்கைகள் கரைந்தன! கோழிகள் கூவின. இளமங்கை யொருத்தி தன் ஆருயிர்க் காதலனைத் தனது செங்கரங்கள் நீட்டிச் சேர்த்தணைத்து இன்ப மூட்டுதல்போல, இள ஞாயிற்றின் செங்கிரணங்கள் உலகைத் தழுவி உயிர்களுக் கின்பம் விளைத்தன.

வஸந்தா கண்விழித் தெழுந்தாள். பக்கத்தில் தன் கணவன் (குமார்) அந்தரத்தில் தொங்குவதைக் கண்டாள். உடல் நடுக்கம் முற்றது. வாய்குளற “ந....ா.... ....தா” என்று வாய்விட்டு அலறினாள். மண்ணில் சாய்ந்தாள். சில விநாடிகள் கழித்து எழுந்தாள். பைத்தியக்காரியைப் போன்று அலைந்தாள். தன் நாதன் பக்கத்தில் இருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். அதில் பின் வருமாறு எழுதப் பெற்றிருந்தது:—

காதலி வஸந்தா!

‘உலக வாழ்க்கையில் சலிப்புற்று, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி உடல் இளைத்து, மனங்களைத்து, கையில் அரைக்காசு தானுமின்றி, இருப்பதைவிட இறப்பதுமேல் என எண்ணி என்னுயிரை நானே போக்கிக் கொண்டேன். அதற்காக நீ வருந்தாதே நீ சுகமாக இருக்க முயல்.

இப்படிக்கு
குமார்.

படித்தாள். செய்வதொன்றும் தோன்றாது தயங்கினாள். இவ்வுலகத்தை வெறுத்தாள். சென்ற இடம் தெரியாமல் மறைந்தாள். அந்தோ! என்னே வறுமையின் கொடுமை!

காதலனா? காதகனா?

(நவரசந் ததும்பும் நவீனம்.)

‘கண்டதுங் காதல்!’ ‘கேட்டதுங் காதல்!’ என்றெல்லாம் மதிமயங்கிக் கெட்டலையும் வாலிபர்களுக்கு இவ்வற்புத மிகுந்த கற்பிதக் கதை தகுந்தவாறு புத்தி புகட்டி, உண்மைக்காதல் இதுவென உணர்த்துகிறது. கலாசாலை மாணவ மாணவிகளின் ஆடம்பர வாழ்க்கையையும் விபரீதப் போக்கையும் அதனால் அவர்கள் அடையும் சீர்கேட்டையும் இந்நூல் ஆசிரியர் அப்படியே தம் இனிய எளிய நடையால் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இவ்வருமையான நாவல் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய தவசியம். சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

இதன் விலை அணா 10 தான்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

எங்கள் வீட்டுப் போக்கிரி

—:(0):—

(தேயு)

ஒருவருக்கும் அடங்காதவன் என்று பெயர் வாங்கின வனைப் பற்றி எழுதுவது உங்களுக்கு எப்படி உதவப் போகிறது என்ற எனக்கு சந்தேகம் உண்டாகிறது. நீங்களும் அப்படி ஒருவருக்கும் அடங்காதவராய் போகாதபடி முன் எச்சரிக்கையாக எழுதலாமென்று துணிந்து கொண்டேன். மேலும் எத்தனையோ பக்தர்களின் சரிதைகளையும், அறிஞர்களின வாலாறுகளையும் வாசித்து சலித்துப் போனவர்களுக்கு ஒரு போக்கிரியின் ஜீவிய சம்பவங்களை வாசிப்பது நவீனமாகவும் ருசிகரமாகவும் தோன்றுமல்லவா? ஒரு வீட்டிலே பிறக்கும் பிள்ளைக ளெல்லாரும் நல்லவர்களாக, இருந்தால் பெற்றவர் யாரை அதிகமாகப் பாராட்டுவார்கள்? என்னுடைய தம்பி ஒரு போக்கிரியாக இருந்ததே, நான் யோக்கியனானதின் ரகசியம். அவனும் என்னைப் போல இருந்திருப்பானுபின்; (இருந்திருக்கக் கூடும்.) எனக்கு தற்சமயம் கிடைத்திருக்கும் கலாசாலை கல்வியும் செல்வாக்கும் என்னிடமிருந்து பறி முதல் பண்ணப் பட்டிருக்கும் அல்லது பாகிக்கப் பட்டிருக்கும் சில வேளைகளில் என்னைக் கண்ணியப் படுத்தும்படி தனது சுபாவமான நற்குணங்களையும் தியாகித்து போக்கிரியாக நடிக்க வந்த அவதாரப் புருஷனே என்று கூட நான் நினைத்ததுண்டு. சரி; இனிமேல் வாசியுங்கள். முடித்த பின் இம் முன்னுரையை திருப்பியும் வாசியுங்கள் யாவும் தலாம்பரமாகத் தோன்றும்.

192-ம் வருடம் எனக்கு வயது 13.

என் தம்பிக்கு வயது 12. பீக்கங் குச்சியை பீடியாக உபயோகித்து புகை விட்டுக் காட்டி, என் சிநேகிதர்கள் என்னை மகிழச் செய்த காலம், என் தகப்பனார் வாயில் வைத்து இழுத்து விட்ட சுருட்டுப் புகை என் நாசித் துவாரங்களைச் சுருங்க வைத்த பிராயம்.

மேற்சொல்லிய ஆண்டின் ஒரு நாள் மாலை, தகப்பனாரின் பெட்டியிலுள்ள பெரிய சுருட்டுகளி லொன்றையும், நெருப்புப் பெட்டியையும் மடியில் வைத்துக் கொண்டு, வீட்டுக் கொல்லைப் புறத்திலுள்ள புளிய மரத்தி லேறினேன். மறு நிமிடம் உல்லாசமாக புகையை இழுப்பதும், புகை செல்லும் பாதையைக் கவனிப்பதுமாக இன்ப சாகரத்தில் ஆழ்ந்து விட்டேன். இப்படி சில நிமிடங்கள் கழிந்தன. ஒரு சமயம் புகை வண்டி என் தலைக்கு மேலாகச் சென்றது. என் கண்களும் அதைப் பின் செல்லவே, மரத்தின் நுனிக் கொம்பைப் பார்த்து விட்டேன். அங்கே எங்கள் வீட்டுப் போக்கிரி உல்லாசமாய் சிகரெட்டு குடித்துக் கொண்டிருந்தான். இருவரும் கீழே இறங்கினோம். நான் முன் வாசல் வழியாய் வீட்டிற்குள் நுழைந்தேன். என் தம்பி சமயலறை வழி பார்த்தான். "அம்மா, அண்ணன் பீடி குடித்திருக்கிறான்" என்று என் தங்கையின் குரல் கேட்டது.

"டே நீயுமா குடிக்கப் பழகி விட்டாய்? ஐயாவிடம் சொல்லுகிறேன் பார்" என்று தன் தாயார் கண்டித்தாள். (என்னையல்ல) அரைமணி நேரத்திற்குள் காணாமற்போன சுருட்டைப் பற்றிய விசாரணை ஆரம்பித்தது.

சுருட்டுப் புகைக்கும், சிகரெட்டுப் புகைக்கும் மண வித்தியாசம் தெரியாத என் தாய், 'இந்தப் பயல்தான் குடித்தான் வாயிலே நாற்றம் இருந்தது' என்று சாட்சி சொன்னாள். சுருட்டை எடுத்ததற்காக மாத்திரமல்ல; அதைக் குடித்ததற்காகவும் என் தம்பிக்கு நாலு அடிகளும் ஒரு வேளை பட்டினியும் கிடைத்தது.

இந்தப் புகை விடும் பழக்கம் 2 வருடங்களாக இருந்த போதிலும் என்னை கண்டு பிடிக்க ஒருவராலும் கூடாதிருந்தது. நான் மட்டுமல்ல எனக்கு மூத்தவர்களும் ஒளித்துக் குடிப்பதில் சமர்த்தர்களா யிருந்தார்கள். ஆனால் இந்த துர்ப் பழக்கத்திற்குரிய தண்டனையை எப்போதும் எங்கள் வீட்டுப் போக்கிரியே ஏற்றுக் கொண்டே வந்தான். வீட்டிற்குள்ளே புகை நாற்றம் உண்டானால் அதற்கு உற்பத்தி ஸ்தானம் என் தம்பியின் வாயே என எல்லாரும் ஊகித்து விடுவார்கள். அவன் வீட்டிற்குள்ளே இல்லாமற் போனாலும் "பீடிக்காரன் வருகிறான் போலிருக்கு. அவனுக்கு முன்னாலே நாற்றந் தான் உள்ளே வருகிறது" என்று என் தாய் அறிவிப்பாள். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே என் தம்பியும் தெய்வாதீனமாக வீடு நோக்கி வந்து கொண்டிருப்பான்.

இது நிற்க, வருடா வருடம் வகுப்பு மாறுவது அதுவும் முதன்மையாகத் தேறுவது எங்கள் வீட்டி லுள்ளவர்களுக்கு கொடுத்து வைத்த பாக்யம். எல்லாப் பிள்ளைகளும் இப்படி யிருந்தால் எல்லாரையும் சமமாகத் தான் பெற்றோர் பாராட்டுவார்கள். இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வு இல்லாமற் போகாதபடி எங்களுக்கு எங்கள் தம்பி கை கொடுத்து தழுவினான். வருடந்தோறும் சித்திரம் தவிர மற்ற பாடங்களில் தேறுவதே யில்லை என்று அவன் கங்கணம் கட்டிக் கொண்டபடியால், படிப்பில் எனக்கிருந்த மதிப்பு அதிகமாயிற்று. "பரீட்சை தேறுகிறதினாலே ஒருவன் வளர்ந்து விடப் போகிறானா, அதனாலே தான் ஒரு வயது அதிகமாகிறதோ" என்பது எங்கள் வீட்டுப் போக்கிரியின் வேதாந்தம். இந்த உண்மையை நீங்கள் ஒருவரும் மறுக்க மாட்டீர்களென்று நம்புகிறேன். மாடு மேய்க்கப் போடுகிறேன் என்று அடிக்கடி என் தகப்பனார் பயமுறுத்துவார். ஆனால் மாடு மேய்க்கப் போட மாட்டார்களென்று என் தம்பிக்கு நிச்சயமாய்த் தெரியும்.

"அன்னை தந்தை உற்றார் சுற்றார் யாரும் உதவுவாரோ? என்று ஒரு பக்தன் பாடினார். முதல் இரண்டு பதங்களையும் எடுத்து விட்டு, அந்த அடியை பாடக் கூடிய மெய் பக்தன் என் தம்பியே என்று சொல்ல வேண்டும். "நான் செத்த பிறகு எனக்காக ஒரு இனத்தானவது அழுதால் என் மீசையை சிறைத்துப் போட்டுவேன்" என்று அடிக்கடி சொல்லு வான். அப்படியானால் எங்கள் சுற்றத் தாருக்கும் எங்கள் வீட்டுப் போக்கிரிக் கும் உள்ள சம்பந்தம் எப்படிப் பட்ட தென்று நீங்களே யூகித்துக் கொள்ளலாம். உறவினர் மேல் அவனுக்கு ஏன் பிரிய மில்லை யென்றால், அவன் மேல் உறவி னருக்கு பிரிய மில்லாததனால் தான் என்று சொல்ல வேண்டும். வீட்டிற்குள் மாமன், சிற்றப்பன் வேறு யாராவது நுழைந்தால் அவன் சமயலறை வழியாக வெளியே கிளம்பி விடுவான். விருந்துக்கு வந்தவர்கள் ஊருக்குப் போகும் வரைக் கும் வீட்டில் தலை காட்ட மாட்டான். அது விஷயமாக வீட்டில் யாராவது அவனை கோபித்தால் "வீட்டை விட்டு போகச் சொன்னால் போய் விடுகிறேன். ஒரு மாதம் பட்டினி வேண்டுமானாலும் கிடக்கிறேன். அந்த நமஸ்காரம் பண்ணு கிறது; பல்லைக் காட்டுவது என்கிற சமாச் சாரம் மட்டும் நம்மிடமாகாது" என்று அழுத்தமாய் பதில் கூறுவான். வீட் டிலே தான், பீடி பிடிக்கிறவன்; பரீட்சை யில் பல்டி யடிக்கிறவன் என்கிறவனை யெல்லாம் கிடைக்கிறது. வீட்டிற்கு வருகிறவனிடமுமா இந்த வசை வாங்க வேண்டும்! அந்த பிஸ்னஸ் இன்றைக்கும் நாளைக்கும் வேண்டாம்" என்பது எங் கள் வீட்டுப் போக்கிரியின் தீர்மானமான அபிப்பிராயம்.

"எக்செப்ஷன்" இல்லாத சூத்திரம் இல்லை யென்பார்கள். அப்படி என் தம் பியையும் விரும்பக் கூடிய ஒரு உறவினர் இருந்தார். அதாவது என் தம்பிக்குப் பிடித்தமான பந்து ஒருவர் இருந்தார். அவரை "நம்முடைய மாமா" என்று அவன் அழைப்பதுண்டு. அவர் மேல் அவனுக்குப் பிரியமுண்டான காரணம் என்ன வென்று எங்கள் ஒருவருக்கும் புரியவில்லை. 'மாமா வியாழக்கிழமையா வருகிறார்களா? சரி நமக்கு அதிர்ஷ்டந் தான்" என்று புதன் கிழமையே கும்மா ளப் போடுவான். அவர் வீட்டில் நுழைந் ததும் ஒரு சாய்மான நாற்காலியை எடுத் துப் போடுவான். 'மாமா பொறுங்கள்'

என்று தலையணைகளை சுத்தமானதோர் துப்பட்டியில் பொதிந்து நாற்காலியில் அமைப்பான். வெகு நாளைக்குப் பின் அந்த நட்பின் ரகசியம் வெளிப்பட்டது.

'நம்முடைய மாமா' கூடிய மட்டும் கனதியான மனிதர். அவர் வருவதற்கு முந்தின நாளே, இந்தப் போக்கிரி தன்னு டைய துணிகளை நன்றாய்த் துவைத்து வைத்து விடுவானாம். வரும் நாளில் அவற்றை மடித்து ஒரு சுத்தத் துப்பட்டி யில் பொதிந்து கொள்ளுவானாம். அந்தப் பஞ்சணையைத்தான் மரியாதையாக மாமா வுக்குக் கீழ் வைப்பது, இப்படிச் செய்வ தால் நன்றாக, 'ஐரன்' ஆகி விடுமாம். "லாண்டரியிலே கூட அப்படி 'ஐரன். ஆகாது'. என்று இன்றும் சொல்லுவான்' தான் துணிகளை இரண்டு நாட்களாகத் தலையணையாக உபயோகித்தாலும் மடங் காத 'காலர்', மாமாவின் கனதியால்

அரைமணி நேரத்தில் 'ஜான்' ஆவதென்றால் எவ்வளவு சவுகரியம்! "இந்த நன்றிக்காக அவரை என்றும் மறவேன்" என்பான். இப்போது எனக்குக் கடிதம் எழுதும் போது, "ஜான் மாமா எப்படியிருக்கிறார் என்ற வரி இல்லாமல் இராது. உங்களுக்கும் ஜான் மாமா உண்டு என்று நம்புகிறேன்.

பள்ளிக்கூடத்தில் அவனுடைய நடத்தை எப்படி யென்கிறீர்களா? டிராயிங் மாஸ்டரிடம் கேட்டால், "——வைப் போல தங்கமான பையன் கிடையாது" என்பார். ஒருதடவை சரித்திர வகுப்பு நடக்கும் போது பின் பெஞ்சிலிருந்து, சிகரெட் புகை உற்பத்தியாகி வகுப்பறையைப் பரிமளித்ததாம். "இந்த நாற்றம் எங்கிருந்தடா வந்தது" என்ற கர்ச்சனை கிளம்பியதும், "சார், கணக்கு சார்வாள் இந்தப் பக்கமா போறாங்க சார்" என்று என் தம்பி பளிச் சென்று விடை பகர்ந்தான். 'கணக்கு சார்வாள்' சிகரெட் பிடிப்பதில் நிபுணர்! தீவிர யோசனையுள்ளவன் என்பதற்கு இதைவிட வேறே சான்று வேண்டுமா?

என் தம்பியின் ஜீவிய சரிதத்தை முடிக்க நேருகிறதே என்று வருந்துகிறேன். எல்லாவற்றையும் சொல்லப் போனால், 'விகடன்' ஆசிரியர் தடை செய்வார். அவனைப் படிப்பினின்று நிறுத்த வீட்டிலே மாதா பிதா உத்தேசித்ததும், தனது நாடக மேடையாகிய வீடு, பள்ளிக்கூடம் எல்லாவற்றையும் வெறுத்தும், யாருக்கும் சொல்லாமல், வெளிக் கிளம்பி விட்டான். வெளியேறி சில மாதங்களுக்குப் பின் எனக்கு வந்த கடிதத்தில்,

அண்ணா.

இதுவரை எனக்குரிய உணவு உடையை என் பெற்றோர் சம்பாதித்துக் கொடுத்ததால், என் சாமர்த்தியத்தை வேறு விஷயங்களில் செலவழித்தேன். அதே சாமர்த்தியமே (என் கல்வியல்ல) எனக்கு வேண்டிய உணவு உடையை எனக்குச் சம்பாதித்துக் கொடுக்கப் போகிறது! ஈசுவரனும் இருக்கிறார்."

என்று கண்டிருந்தது.

ஆக்ட் புத்தகங்கள்.

இந்தியன் பினல்	ரூ.	அ.	பாம்பரை கிராமஉத்தி	ரூ.	அ.		ரூ.	அ.
கோட் சட்டம்	3	0	யோகஸ்தர்கள் சட்டம்	1	0	கர்ணம் டெக்ஸ்ட்	1	4
கிரிமினல் லா	3	0	இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0	ஸ்டாம்பு ஆக்ட்	0	12
சிவில் லா	3	0	லோகல்போர்ட் ஆக்ட்	2	0	ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
விவகார சிந்தாமணி	2	8	பஞ்சாயத்துச் சட்டம்	1	4	டிரஸ்டிகள் சட்டம்	0	12
பெரிய ஹிந்து லா	2	0	இந்துதேச சாட்சிஆக்ட்	1	0	கால நிர்ணயச் சட்டம்	0	8
முகம்மதியன் லா	2	0	தேவஸ்தான சட்டம்	1	0	நில ஆக்கிரமிப்பு என்கு		
கிராம முன்சிப் சட்டம்	1	8	எஸ்டேட் லாண்டு ஆக்ட்	1	4	ரோச்மெண்ட் சட்டம்	0	4
						கிராமச் சுகாதாரம்	0	2

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.